
# திருக்கோயில்




செப்டம்பர்
1999

விலை
ரூபாய் ஐந்து





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் தங்கத்தேர்த் திருப்பணி நடைபெற்று வருகின்றது. நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள் தங்கத்தேர்த் திருப்பணியை அண்மையில் சென்று பார்வையிட்டார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் துணை ஆணையாளர் திருமிகு மு. இராமச்சந்திரன், பி.ஏ., அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரம் மற்றும் அறங் காவலர்கள் உடன் உள்ளார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 | பிரமாதி ஆண்டு ஆவணி செப்டம்பர் 1999 | மணி 9 |
|---|---|---|---|



**சிறப்பாசிரியர்**

**திருமிகு சுகவனேஸ்வர்**, இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

**ஆசிரியர்**

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்
(பொறுப்பு)

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


**முகப்பு**

திருச்சி அருள்மிகு
உச்சிப்பிள்ளையார் ஆலயம்

## பொருளடக்கம்


''நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்''
- சுகவனேஸ்வர், இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்
அவர்கள்

விநாயகர் திருவிளையாடல்கள்
- கணபதிப்பிரியா

ஸ்ரீ சாரதா புஜங்கம்
- பாரதி தீர்த்ததாசன்

கொடிகள்
- டாக்டர் டி. செல்வராஜ்

கிருஷ்ண ஜயந்தி
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கிருஷ்ணாவதாரத்தில் கட்டுண்ட ஆழ்வார்கள்
- திருமதி கோமதி ராகவன்

கம்பரின் இராமாவதாரம்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

இல்லையே அமங்கலம் இல்லையே
- டாக்டர் இரா. செல்வகணபதி

ஸ்ரீ வைகுண்டம் எவ்வளவு தூரம்
- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

வினாவும் விடையும் (வைணவம்)
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

வாசகர் எண்ணங்கள்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# ''நம்பி ஆரூரன் நாம் தொழும் தன்மையான்''

திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்,
இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை - 34.

புலிக்கால் முனிவர் எனும் வியாக்ரபாதரின் திரு மகனாராகப் பிறக்கும் புண்ணியம் செய்தவர் உபமன்யு முனிவர்.

இந்த உபமன்யு முனிவர் குழந்தையாய் இருந்த போது பசிக்கு அழுதபோது பாற்கடலையே வரவழைத்து பருக அளித்தனர் தில்லை அம்பலவர் என்றால் இப் புண்ணிய முனிவரின் பெருமையை என்னென்பது?

''பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே''

என்ற சேந்தனாரின் திருப்பல்லாண்டுப் பாடல் சிறப் பிக்கும் பெருந்தகை ஞானமுனிவரே உபமன்யு முனிவர் ஆவார்.

இத்தகைய பெருமையுள்ள உபமன்யு முனிவர் திருக்கயிலாயத்தில் சுத்தயோகிகள் சூழ வீற்றிருந்தனர். அப்போது தென்திசையில் ஓராயிரம் சூரியர்கள் ஒருங்கு கூடி வந்ததைப்போல் பேரொளிச்சுடர் தோன்றியது. அப்பேரொளியைக் கண்டு தம் திருக்கரங்களைச் சென்னி மேல் குவித்து வணங்கலானார் உபமன்யு முனிவர்.

''சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் வணங்காத தாங்கள், வணங்கும் பெருமையுள்ளவர் யாவர்?'' என யோகிகள் வினவ ''நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்'' என்று நம்பியாரூராகிய சுந்தரர் பெருமையை உபமன்யு முனிவரே யோகியார் அனை வருக்கும் அவருடைய அருட்பெருமையை எடுத்து மொழிகிறார் என்றால், சுந்தரமூர்த்தி நாயனார் தம் பெருமையை நாம் என்னென்று போற்றுவது?

பாற்கடலில் பொங்கி, உலகத்தை அழிக்க வந்த ஆலகால விஷத்தைச் சிறு உருண்டையாக்கி இறைவ னிடத்தில் அளித்தவர் ஆலால சுந்தரர். சிவ - அமிர்தத்தை இடைவிடாது பருகியதன் காரணமாகத்தான் கொடிய விஷத்தை கையாளும் வல்லமை ஆலால சுந்தரருக்கு வந்தது என்றால் மிகையாகாது.

சிவபெருமானின் அணுக்கத் தொண்டராகிய சுந்தரர், கயிலாய நந்தவனத்தில் இறைவனுக்காக மலர் பறிக்க வந்தபோது, அவ் வாறே பராசக்திக்காக மலர் பறிக்க வந்த அனிந்திதை, கமலினி எனும் இரு பெண் களைக் கண்ணுற்றார்.

உத்தம சிவபக்தரான சுந்தரர், அவ்விரு பெண் களின் மேல் தம் நாட்டத்தைச் செலுத்தியதன் காரணம், அடியார்களின் அளவற்ற பெருமையைத் திருத் தொண்டத் தொகையாக, சுந்தரர் தென்னாடு போந்து பாடியருள வேண்டும் என்று கண்ணுதற்பெருமான் திருவுள்ளம் பாலித்தமைதான் என்று உபமன்யு முனிவர் சுத்த யோகியருக்குக் கூறும் பின்வரும் பெரிய புராணப் பாடல் இங்கு நாம் எண்ணி மகிழத்தக்க ஒன்றாகும்.

''மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப்
போதுவான் அவர்மேல் மனம் போக்கிடக்
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார்.''

(பெ.பு. 35)

''பெண்கள்மீது ஆசை கொண்டனை, ஆகவே தென்னாட்டில் பிறந்து அவர்களுடன் இன்ப வாழ்வு வாழ்ந்து வருக'' என்றார் இறைவர். ''இறைவா! தங்கள் திருவுள்ளப் பாங்கின் வண்ணம் ஆகட்டும். ஆயினும் அடியேன் மனிதனாகப் பிறந்து, உம்பணி மறப்பேன் ஆகில், நீரே வந்து எம்மைத் தடுத்தாட் கொள்ள வேண்டும்'' என ஆலால சுந்தரர் வேண்டினார். இறைவரும் இசைந்து, அவரை மாதவம் செய்த நம் புண்ணிய தமிழகத்தில் திருமுனைப் பாடி நாட்டில் திருநாவலூர் திருத்தலத்தில், வேதியர் குலத்தில், சடை யனார் இசைஞானி தம்பதியர் திருமகனாராகத் திரு வவதாரம் செய்யத் திருவுள்ளம் பாலித்தனர்.

''பெருகிய நலத்தால் மிக்க
பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க
அருளினால் அவத ரித்த

மருவிய தவத்தால் மிக்க
வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறையவர்கள் நீடும்
திருநாவலூராம் அன்றே''
(பெ.பு. 148)

''மாது ஒரு பாகனார்க்கு
வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடைய னாருக்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனைஇசை ஞானியார்பால்
தீதகன்று உலகம் உய்ய
திருஅவதாரம் செய்தார்''
(பெ.பு. 149)

இவ்வாறு பிறந்த சுந்தரர், தம் பாட்டனார் பெயரான நம்பியாரூரர் என்பதையே தம் பெயராகக் கொண்டு வளரும்போது, இறைவரின் அணுக்கத் தொண்டராய்த் திகழ்ந்து திரு அவதாரம் புரிந்த இவரை, அந்நாட்டின் மன்னரான நரசிங்க முனையரையர் கண்ணுற்றுத் தம் வளர்ப்பு மகனாகக் கொண்டு வளர்த்தார். கலை பலவும் கற்றுணர்ந்த நம்பியாரூரர் கட்டிளங் காளைப் பருவம் கொள்ள அரசரும், பெற்றோரும் இவர்தம் கடிமணம் காண ஆவலுற்று, புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் திருமகளை மணமகளாய் நிச்சயம் செய்து புத்தூரில் வெகு விமரிசையாகத் திருமணத்திற்கும் ஏற்பாடுகள் செய்துவிட்டனர்.

''வரும்குல மறையோர் புத்தூர், மணம் வந்த புத்தூ''ராகப் பொலிவுற்றிருந்த வேளையில், இத் திருமணம் சொர்க்கத்தில் இறைவர் நிச்சயித்த திருமணத்திற்கு மாறானது என்பதால் தடுத்து ஆட்கொள்ள இறைவரே மறையவராக வந்துற்ற மாட்சியினைச் சேக்கிழார் பெருமான்

''ஆலும்மறை சூழ்கயிலையின் கண் அருள் செய்த
சாலும் மொழியால் வழிதடுத்து அடிமை கொள்வான்
மேலுற எழுந்து மிகுகீழ்உற அகழ்ந்து
மாலும் அயனுக்கும் அரியார் ஒருவர் வந்தார்''
(பெ.பு. 174)

என்று காட்டுகின்றார்.

சிவப்பழமாக - முதியவைதிக வேதியராக வந்துற்ற இறைவர், நம்பியாரூரன் தமக்கு அடிமை ஆதலால் அவர் இத்திருமணம் புரிதல் கூடாது என்று தடுக்கிறார். அது கேட்டு நம்பியாரூரனும் நகைத்து



''ஆசில் அந்தணர்கள் வேறோர்
அந்தணர்க்கு அடிமை ஆதல்
பேச இன்று உன்னைக் கேட்டோம்
பித்தனோ மறையோய்''

என்று ஏச, அவர் ஏச்சினைப் பொருட்படுத்தாமல் இறைவரும் நகைத்தே

''பித்தனும் ஆகப் பின்னும்
பேயனும் ஆக, நீ இன்று
எத்தனை தீங்கு சொன்னால்
யாதும் மற்றுஅவற்றால் நாணேன்
அத்தனைக்கு என்னை ஒன்றும்
அறிந்திலை ஆகில் நின்று
வித்தகம் பேச வேண்டா
பணிசெய்ய வேண்டும் என்றார்''
(பெ.பு. 187)

இறைவர் தம் வழக்கிற்கு ஆதாரமாக நம்பியாரூரனின் பாட்டனார் எழுதிக் கொடுத்துள்ள ஆவணம் இருப்பதாகக் கூற, வன்தொண்டராக மாறிய நம்பியாரூரர் அத்திருமணப் பந்தலிலேயே பலருங்காண முதிய வேதியரைப் பின்தொடர்ந்து ஓடி, ஓலையை வலிந்து பற்றி அதனைக் கிழித்தும் எறிந்துவிட்டார்.

''ஓலையை வலிய வாங்கிக் கிழித்துத் தான் அடிமை என்பதை நம்பியாரூரனே மெய்ப்பித்து விட்டான்'' என்று பழைய மன்றாடியாகிய இறைவர் வாதிட அவருடைய ஊராகிய திருவெண்ணெய் நல்லூருக்கே சென்று நியாய சபையில் வழக்கை ஆய்வு செய்ய ஆன்

றோர்கள் முடிவெடுக்க புத்தூரில் நடைபெறவிருந்த திருமணம் தடைப்பட்டுப் போகின்றது.

திருவெண்ணெய் நல்லூரில் நியாயசபைமுன் நடைபெறும் விசாரணையில், வன்தொண்டர் வலிந்து பற்றிக் கிழித்தது படி ஓலைதானே தவிர, மூலஓலை பத்திரமாக இருப்பதாக முதியவேதியர் கூற அவையோர் அவ்வோலையை அருள்பெறு கரணத்தானைக் கொண்டு படிக்கச் செய்கின்றனர்.

''அருமறை நாவல் ஆதி
சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்
பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு உளோரும்
வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன்
இதற்கிவை என் எழுத்து''

என அவ்வோலையிலும் ''பித்தன்'' எனவே முதிய வேதியர் பெயர் இருந்த பொருத்தம் என்னே! என்னே!

சாட்சிக்கையெழுத்துடன் முறையாக இருந்த வேதியரின் ஆவண ஓலையை நம்பியாரூரனின் பாட்டனாரின் பழைய கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தபின் ''நான்மறை முனிவருக்கு நம்பியாரூரே தோற்றீர்! பான்மையில் ஏவல் செய்தல் கடனே'' என்று அறங்கூறு அவையத்தார் தீர்ப்பும் வழங்கி விட்டனர்.

வழக்கில் தீர்ப்பும் வழங்கிய பிறகு அறங்கூறு அவையத்தினர் முதிய வேதியரிடம் ''திருவெண்ணெய் நல்லூரில் இதற்குமுன் பார்த்தறியோம். உங்கள் இருப்பிடம் காட்ட வேண்டும்'' என்று கேட்டனர். பொரு அரும் வழக்கில் வென்ற புண்ணிய முனிவரும் ''வாரும்'' என்று அனைவரையும் அழைத்துச் சென்று ''திருவருட்துறை'' என வழங்கும் திருக்கோயிலுக்குள் சென்று மாயமாய் மறைந்து விட்டார்.

அப்போது திகைத்துநின்ற நம்பியாரூராருக்கு உமாதேவியோடு விடையூர்தியில் காட்சி வழங்கிய இறைவர்

''முன்புநீ நமக்குத் தொண்டன்
முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் ஏவலாலே
பிறந்தனை மண்ணின் மீது
துன்புஉறு வாழ்க்கை நின்னைத்
தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர்
நாம்தடுத்து ஆண்டோம் என்றார்''
(பெ.பு.213)

இறைவரின் அருளுரை கேட்ட அப்பொழுதில் ஆரூரருக்குக் கயிலாயத்தில் தாம் அணுக்கத் தொண்டராகப் பணிபுரிந்ததும், இறைவர் திருவருள் புரிந்து தம்மைப் பூவுலகிற்கு அனுப்பிவைத்த யாவும் புரிந்தது. அப் பொழுது நம்பியாரூரரை நோக்கி இறைவர் சொற்றமிழ் பாட ஆணை பிறப்பித்தார்.

''மற்றுநீ வன்மை பேசி
வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார் ''
(பெ.பு.216)

''கோதிலா அமுதே! உன் குணப்பெருங்கடலை நாயேன் யாதினைச் சொல்லி எப்படிப் பாடுவேன்'' என்று வினவிய நம்பியாரூரரிடம் ''முன்பு பித்தன் என்று வைதனையே! அதனையே வைத்துப்பாடு'' என்று அங்கணர் அருளிச்செய்ய

''பித்தா பிறைசூடி எனப் பெரிதாம் திருப்பதிகம்
இத்தாரணி முதல் ஆம் உலகுஎல்லாம்உய எடுத்தார்''

என்று சுந்தரர் பதிகம்பாட ஆரம்பித்த அற்புதத்தைப் போற்றுகின்றார் சேக்கிழார்.

சுந்தரர் பாடியவனாக நூறுதிருப்பதிகங்கள் இன்று நமக்குக் கிட்டியுள்ளன. அவற்றை ஏழாம் திருமுறை என சைவ உலகம் போற்றிக் கொண்டாடி வருகின்றது. சுந்தரர் பாடலைத் ''திருப்பாட்டு'' என்று சிறப்பித்துக்கூறுவர். திருஞானசம்பந்தர் பாடல்கள் ''திருக்கடைக்காப்பு'' எனவும், திருநாவுக்கரசர் பாடல்கள் ''தேவாரம்'' எனவும் சிறப்பிக்கப்பெறும். மூவர் தேவாரம் எனக்கூறும் வழக்கம் இருப்பினும், சுந்தரர் அருளிய திருப்பதிகங்களுக்குத் ''திருப்பாட்டு'' என்பது சிறப்புப் பெயராகும்.

சுந்தரரின் திருப்பாட்டு பயின்றால் உயிருக்குள் உயிரும் உருகும் என்று புகழ்ந்து போற்றுகின்றார் அருட்பிரகாச வள்ளலார்.

''தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன்;
நாவொன்றோ
ஊன்படிக்கும், உளம்படிக்கும்,உயிர்படிக்கும்
உயிருக்கு உயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப்
பெருந்தகையே''

சுந்தரர் திருப்பாட்டு ஆற்றிய அற்புதங்கள் மிகப்பலவாகும். அவற்றில் முக்கியமான சிலவற்றைப் பின்வரும் பாடல் தொகுத்துச் சுட்டக் காணுகின்றோம்.

''வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட நிற்குமே
செங்கல் ஆனது தங்கம்அது ஆக்குமே
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர் சுந்தரர் பாடலே''

திருமுறைப்பாடல்கள் தேவாமிர்தம் ஆகும். ''அன்ன மெய்த்திருவாக்கு எனும் அமுதம்'' என்பது சேக்கிழார் வாக்கு. திருமுறைப்பாடல்கள் எலும்பைப் பெண்ணாக்கியும், அரவவிடத்திலிருந்து உயிர்ப்பிழைப் பித்தும் அற்புதங்கள் சிவலீலையின் அருளால் செய் திருப்பதை நமக்குத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

சிவப்பிரகாச சுவாமிகள் தாம் அருளிச் செய் துள்ள நால்வர் நான் மணிமாலையில் திருஞான சம்பந்தர் அங்கம்பூம்பாவையை உயிர்ப்பித்ததை விட வும், திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளாரின் மகனாரை அரவவிடத்திலிருந்து மீட்டதை விடவும், சுந்தரர் முதலையுண்ட பாலனை மீட்டதே அதிஅற்புதமானது என்று வியந்து போற்றி அதற்கான காரணத்தையும் கூறுகின்றார். திரு ஞானசம்பந்தர்பூம்பாவையின் அஸ்திக் குடம் இருக்க, உயிர்உண்டாக்கினார். திருநாவுக்கரசர் அரவம் தீண்ட மாண்ட அப்பூதியடிகளாரின் மகன் உயிரற்றஉடல் இருக்க உயிருண்டாக்கினார். ஆனால் சுந்தரரோ அவிநாசியில் பாலனை உண்ட முதலையும், முதலை வாழ்ந்திருந்த குளமும் கூட இல்லாத நிலை யில், தம்திருப்பதிகத்தால் மீளவும் தூர்ந்த குளத்தை உண்டாக்கி, இறந்த முதலை யையும் உண்டாக்கி, அம் முதலையின் வாயிலிருந்தே ஐந்துவயதில் இறந்து போன பாலனை இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலை யில் இன்றிருந்தால் அப்பாலகன் எப்படி ஏழுவயது பாலகனாக இருப்பானோ அப்படியே உயிர்உண்டாக் கிப் பாலகனை மீட்ட அதிசயம் அதி அற்புதமானது என்று வியந்து போற்றி யிருக்கக் காணுகின்றோம்.

அருட்பிரகாச வள்ளார் இவ்வதியசத்தை

''இலைக்குள நீர் அழைத்து அதனில் இடங்கர்
உற அழைத்து அதன்வாய்த்
தலைக்குதலை மதலை உயிர்தழைப்ப அழைத்த
ருளியநின்
கலைக்கும் வடகலையின் முதற்கலைக்கும்
உறுகணக்கு உயர்பொன்
மலைக்கும் அணுநிலைக்கும் உறா வன்தொண்டப்
பெருந்தகையே''

என்று ''ஆளுடைய நம்பியருள்மாலை''யில் வியந்து போற்றியிருத்தல் காணுகின்றோம்.

இவ்வாறு வெங்கரா உண்டபிள்ளையைச் சுந்தரர் மீட்கக் காரணம் ஆனது அவிநாசித் திருத்தலத்தில் அவர் பாடியருளிய ''எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம் பெருமானையே'' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஆகும்.

அப்பதிகத்தில் நான்காவதுபாடல் பின்வருமாறு:

''உரைப்பார் உரைஉகந்து உள்கவல்லார் தங்கள்
உச்சியாய்
அரைக்காடரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச்
சொல்லுகாலனையே''

என்ற பாடலில் ''முதலையைப் பிள்ளைதரச் சொல்லு'' என்று சுந்தரர் வேண்ட, முதலையின் பொருட்டுக் குளம் உண்டானது. குளத்தில் முதலை உண்டாகி, முதலையின் வயிற்றுக்குள் இருந்து உயிருடன் பிள்ளை வெளிவரும் அதிசயமும் நடைபெற்றது.

இவ்வற்புதத்தைச் சேக்கிழார் பெருமான் பெரு விம்மிதமுற்றுத் தாம் பாடியருளியுள்ள பெரிய புராணத்துள்

''உரைப்பார் உரை என்று எடுத்த திருப்
பாட்டு முடியாமுன் உயர்ந்த
வரைப்பான்மையின் நீள் தடம்புயத்து
மறலி மைந்தன் உயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலை வயிற்று
உடலின் சென்ற ஆண்டுகளும்
தரைப்பால் வளர்ந்தது எனநிரம்ப
முதலை வாயில் தருவித்தான்'' (4244)

''பெருவாய் முதலை கரையின்கண்
கொடுவந்து உமிழ்ந்த பிள்ளைதனை
உருகாநின்ற தாய்ஓடி
எடுத்துக் கொடுவந்துஉயிர் அளித்த
திருவாளன் தன் சேவடிக்கீழ்ச்
சீலமறையோனொடு வீழ்ந்தாள்
மருஆர் தருவின் மலர்மாரி
பொழிந்தார் விசும்பில் வானோர்கள்''

(4245)

''மண்ணில் உள்ளார் அதிசயித்தார்
மறையோர் எல்லாம் உத்தரியம்
விண்ணில் ஏறவிட்டு ஆர்த்தார்
வேதநாதம் மிக்கு எழுந்தது
அண்ணலாரும் அவிநாசி
அரனார் தம்மை அருமறையோன்
கண்ணின் மணியாம் புதல்வனையும்
கொண்டு பணிந்தார் காசினிமேல்'' (4246)

எனப் பாடிப் பூரித்திடக் காணுகின்றோம்.

நம்பியாரூரர் இப்பூவுலகில் வாழ்ந்திருந்த ஆண்டுகள் பதினெட்டு மட்டுமே. அப்பர் 81 ஆண்டுகளும், மாணிக்கவாசர் 32 ஆண்டுகளும், திருஞான சம்பந்தர் 16 ஆண்டுகளும், சுந்தரர் 18 ஆண்டுகளும் இப்பூவுலகில் வாழ்ந்து சிறப்புற்றதைப் பின்வரும் பாடலால் அறிகின்றோம்.

''அப்பருக்கெண் பத்தொன்(று) அருள்வாத வூரர்க்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொல்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினா(று) அறி''

மூவாறு ஆண்டுகளே வாழ்ந்திருந்த சுந்தர மூர்த்திப்பெருமான் இப்புவியில் தோன்றி ஆற்றிய அற்புதங்கள் மிகப்பலவாகும். அவற்றை விரிப்பின் பெருகும், தொகுப்பின் எஞ்சும். அவர் இப்புவியில் திருஅவதாரம் செய்தது ''திருத்தொண்டத் தொகை'' யருளிச் செய்யும் பொருட்டே ஆகும்.

சுந்தரர் ''திருத்தொண்டத் தொகை'' அருளிச் செய்தமையால்தான் நம்பியாண்டார்நம்பிகள் ''திருத்தொண்டர் திருவந்தாதி'' அதன் வழிநூலாகப்பாடியருளினார். தெய்வச்சேக்கிழார் பெருமான் அவற்றின் விரிநூலாகத் ''திருத்தொண்டர் புராணம்'' எனும் பெரியபுராணம் பாடியருளினார். இன்று சைவத் திருக்கோயில்கள் யாவற்றிலும் அறுபத்துமூவர் திருமேனிவைத்து வழிபாடு செய்து வருகின்றோம், நாயன்மார்கள் நமக்கு வழி காட்டிகளாக, ஆங்கிலத்தில் சொல்லப்படுவது போல் Role Model ஆகத் திகழ்கின்றனர் என்றால் அதற்குக் காரணம் சுந்தரர். அவரைத் தீதிலாத் திருத் தொண்டத் தொகை அருளிச்செய்விக்கும் பொருட்டே இப்புவியின்கண் திருஅவதாரம் செய்வித்தார் எம்பெருமான் என்பது தேற்றம்.

ஆகவேதான் சேக்கிழார் பெருமானும் பெரிய புராணத்தில் ''திருத்தொண்டத் தொகை''யின் சிறப்பினைக் கொண்டாடிப் போற்றியுள்ளார்.

''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று திருவாரூர் இறைவர் அடிஎடுத்துக் கொடுத்திட

''தம்பெருமான் கொடுத்த மொழி
முதல்ஆகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத்
தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தான்அருளும்
உணர்வுபெற உலகுஏத்த
எம்பெருமான் வன்தொண்டர்
பாடிஅவர் எதிர்பணிந்தார்'' (348)

என்பது சேக்கிழார் வாக்கு.

''ஞாலம் உய்ய, நாம் உய்ய
நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்ய, திருத்தொண்டத்
தொகைமுன் பாட'' (499)

''வேறுபிறிதுஎன்? திருத்தொண்டத்
தொகையால் உலகுவிளங்கவரும்'' (501)

என்பனவும் சேக்கிழார் பாடல்வரிகளே.

மாதவ சிவஞான மாமுனிவர், சுந்தரரை ''நமது குல தெய்வம்'' என்று போற்றியுள்ளார்.

''ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர் திருத்தொண்டத்தொகை விரித்த
பேரருளின் பெருமாள், என்றும்
திருமணக்கோலப்பெருமாள், மறைப்பெருமாள்,
எமது குலதெய்வம் ஆமால்''.

சுந்தரரின் ''திருத்தொண்டத் தொகை'' பாடியருளிய இத்தகைய அருளின் திறம்போற்றியே, உபமன்யு முனிவரும் திருக்கயிலையின் கண் ஆயிரம் ஞாயிறு ஒருங்குதோன்றிய சோதியாக ஆடிசோதியில் கயிலைக்கு எழுந்தருளிய சுந்தரரை வணங்கி ''நம்பிஆரூரன் நாம் தொழும் தன்மையான்'' எனப் போற்றினார். நாமும் நம்பியாரூ ரரின் மெய்ப்புகழினைத் தலைமேற்கொண்டு போற்றிடு வோமாக.

''மலர்மிசை அயனும் மாலும்
காணுதற்கு அரிய வள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூர்
ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டு கொள்ளப்
பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும்
தலைமைநம் தலைமை ஆகும்'' (பெ.பு.550)

★★★

# விநாயகரின் திருவிளையாடல்

- கணபதிப்பிரியா

பிடியதனுரு வுமைகொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே

- திருஞானசம்பந்தர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

- திருமூலர்

நமது பரத கண்டத்தில் விநாயகர் வழிபாடு தொன்று தொடடு இருந்து வருகிறது. நேபாளம், சீனம், திபெத்து, சையாம், ஜப்பான், சாவகம் (ஜாவா), கலி போர்னியா, பர்மா முதலிய நாடுகளிலும் கணேச வழி பாடு இருந்ததற்கு சான்றுகள் உள்ளன. சைவரே யன்றி வைணவரும், சமணரும், பௌத்தரும் இவரை வணங்குகின்றனர். ஆண்டுக்கொருமுறை இவருக்கு நாடு முழுமையும் விழாக் கொண்டாடப்படுகிறது. கோயில்களிலெல்லாம் விநாயகருக்குப் பூசை வழிபாடு சிறப்பாக நடைபெறும். மக்கள் விரதம் இருந்து வீட்டில் கணபதிக்குப் பூசனை புரிவர்.

விநாயகர், பார்வதி பரமசிவனுக்கு மானசிக புத்திரர், ஓங்காரவுருவினர், யானைமுகம் தேவஉடல், பூதஅடிகள் உடையவர். ஒற்றைக்கொம்பர், இருசெவியினர், முக்கண்ணர், துதிக்கையுடன் ஐந்து கரத்தர், அங்குச பாசத்தர், ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர், பிறைசூடியவர், மும்மதத்தர், பெருச்சாளி வாகனர். விநாயகர் என்றால் தமக்கு மேல் நாயகர் அல்லது தலைவர் இல்லாதவர் என்று பொருள். இவரை வணங்கியே எல்லாக் காரியங்களும் தொடங்குவது நம் நாட்டில் மரபு. அவர் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

***மாங்கனி பெற்றது :*** நாரதர், சிவபெருமான் திருமுன்னர் ஒரு கனியை வைத்தார். இருமருங்கிலுமிருந்த கணபதி, முருகன் இவர்களை நோக்கி 'உங்களில் எவர் முன்னர் உலகத்தைச் சுற்றி வருகிறார்களோ அவருக்கு இப்பழத்தைக் கொடுப்பேன் என்று சிவபெருமான் கூறினார். முருகன் மயில்மீதேறி உலகைச் சுற்றிவரச் சென்றார். விநாயகரோ தம் தாய் தந்தையரைச் சுற்றி வந்து நின்றார். பழத்தைப் பெற்றார். அகில உலகங்களெல்லாம் ஆண்டவன் உள் அடக்கம் என்ற உண்மையை இக்கதை விளக்குகிறது. நம்பியாண்டார் நம்பி, கபிலதேவர், அதிரா அடிகள் முதலியோர் இவ்வரலாற்றைத் தங்கள் பாடல்களில் கூறியிருக்கின்றனர்.


***முருகன் வள்ளியை மணக்க உதவியது:*** முருகப் பெருமான் தினைப்புனத்தில் காவலிருந்த வள்ளியை மணக்கத் திருவுளங்கொண்டார். கிழவேடத்தில் சென்றார். வள்ளி பயந்து குமரனை மணக்க இசைந்தாள். அருணகிரிநாதர், 'அத்துயரது கெட சுப்பிரமணிபடும் அப்புனம் அதனிடை இபமாகி, அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணமருள் பெருமாளே' என்று கூறியிருக்கிறார்.

***அச்சொடித்தது :*** திரிபுரத்தை எரிக்கச் சிவபெருமான் தேர்மேலேறிப் புறப்பட்டார். எவரும் விநாயகரை நினைக்கவில்லை. அது கண்டு சினங்கொண்ட ஐங்கரன் தேரின் அச்சை ஒடித்தார். 'முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம் அச்சத்து பொடி செய்த அதிதீரா' என்று திருப்புகழ்ப்பாடல் குறிக்கிறது. இந்த இடமே அச்சிறுப்பாக்கம் என்பர்.

***பாரதம் எழுதியது :*** விநாயகப் பெருமான் தன்னுடைய ஒரு கொம்பையொடித்துப் பாரதத்தை மேரு மலையில் எழுதினார் என்பர். இதையும் அருணகிரியாரே 'முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே' என்று போற்றுகிறார். பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வாரும்,

''நீடாழி உலகத்து மறை நாலொ
டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூ
ரெழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ''

என்ற துதிப்பாடலுடன் நூலைத் தொடங்குகிறார்.



**காவிரியை உற்பத்தி செய்தது :** இந்திரன் சீர்காழியில் நந்த வனம் வைத்தான். மழையின்மையால், பூச்செடிகள் வாடின. விநாயகப் பெருமானை வழிப் பட்டான். அவர் சையமலைக்குச் சென்று அங்கு அகத்திய முனிவர் ஆச்சிரமத்தை அடைந்தார். அவர் வைத்திருந்த கமண்டல நீரை ஒருகாக உருவத்தில் சென்று கவிழ்த்தார். அந்தநீர் ஒரு ஆறாகப் பெருகியது. காகம் விரித்ததால் காவிரி என்ற பெயர் ஏற்பட்டது. 'அகத்தியன் தனது கரகம் கவித்த காவிரிப் பாவை' என்று இச்செய்தியை மணி மேகலை குறிக்கிறது. சிவப்பிரகாச சுவாமிகள்

''சுரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருசுவார் கடல் பெய்த வயிற்றினோன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்.''

என்று பிரபுலிங்க லீலையின் காப்புச் செய்யுளில் சொல்லியிருக்கிறார்கள்.

**இராவணனிடம் விநாயகர் லீலை :** இராவணன் தன் தாயார் பூசை செய்வதற்காகக் கைலாசத்திலிருந்து ஒரு இலிங்கத்தைக் கொண்டு வந்தான். அவன் மாலைக் கடன்களைச் செய்யும் பொருட்டுத்தன் கையிலிருந்த இலிங்கத்தை அங்கு நின்ற சிறுவனிடம் கொடுத்தான். அச்சிறுவன் இராவணன் வருவதற்குள் இலிங்கத்தைக் கீழே வைத்து விட்டான். இராவணன் கோபங்கொண்டு சிறுவனைக் குட்டினார். இலிங்கத்தை பலம் கொண்டு எடுக்க முயற்சித்தான். முடியவில்லை. அதனால் அவ ருக்கு மகாபலலிங்கம் என்ற பெயரும் அவ்விடத்திற்குப் பூகைலாசம் என்றபெயரும் வழங்குகின்றது. இது திரு கோக்கரணம் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலம். மேற்குக் கடற்கரையில் வட கன்னட நாட்டில் உள்ளது. சிறுவனாக வந்தவரே விநாயகப் பெருமான். அவருடைய உருவம் இராவணன் குட்டிய அடையாளத் துடன் திருக்கோகரணத்தில் இருக்கிறது. இராவணன் மாலைக் கடன் செய்த இடம் ஒரு தீர்த்தமாகவும் அங்கு திகழ்கிறது.

**திருவரங்கத்தில் பெருமானைக் கிடக்கச் செய்தது:** இராமர் சீதையை மீட்டுக்கொண்டு அயோத்தி சேர்ந் தார். விபீடணரும் உடன் சென்றார். இராமருக்கு முடிசூட்டு விழா நடந்தது. விபீடணர் இலங்கைக்குத் திரும்பும்போது இராமரிடம் திருமாலின் திருவுரு வம் ஒன்றைப் பெற்றுப் புறப்பட்டார். திருவரங்கத்தை அடைந்தார். காலைக் கடன்களை முடிக்க எண்ணி னார். அங்கு நின்ற இளைஞரிடம் அந்த திருவுருவத் தைக் கீழே வைக்காமலிருக்கும்படி சொல்லி கடன் முடிக்கப்போனார். சிறுவன் பெருமான் உருவத்தைக் கீழே வைத்து விட்டான். வந்த விபீடணர் உருவத்தை எடுக்க முயன்றார். இயலவில்லை. சிறுவனைத் துரத் தினார். அவன் ஓடிச் சென்று மலையுச்சியை அடைந்

தான். உடனே விநாயகராக வீற்றிருந்தார். அவரே இப் போது உச்சிப் பிள்ளையார் என்று எல்லாராலும் போற்றப்படுகிறார்.

**ஔவையைக் கயிலை சேர்த்தது :** சேரமான் பெருமாள் நாயனார் குதிரையிலும் சுந்தரமூர்த்தி சுவாமி கள் வெள்ளையானையின் மேலும் திருக்கயிலாயத் திற்குப் புறப்பட்டுச் சென்றனர். தமிழ் மூதாட்டியான ஔவைப்பிராட்டி அவர்கள் இருவரும் கயிலைக்குப் புறப்பட்டுச் சென்றதை அறிந்து தானும் அங்குப் போய்ச் சேரவேண்டுமென்ற விருப்பத்தினால் விநாயகப் பெரு மானுக்கு விரைவாகப் பூசையைச் செய்யத் தொடங்கி னார். ஆனைமுகன் 'அம்மையே! நமக்கு நீ செய்யும் வழிபாட்டை அமைதியாக வழக்கம்போல் செய். சேர மான், சுந்தரர்க்கு முன் உன்னைக் கயிலைச் சேர்ப் போம்' என்று சொன்னார். மூதாட்டியாரும் முறைப்படி பூசையை நடத்தினார். உடனே மூத்த பிள்ளையார் துதிக்கையால் ஔவையாரைத் தூக்கி கயிலையில் சேர்த்தார். முன் புறப்பட்ட இருவருக்கும் முன்னே போயடைந்தார்.

**கணக்குப்பிள்ளையாகக் கடன் செய்தது :** முதலாம் இராஜேந்திரச்சோழன் கங்கை கொண்ட சோழபுரம் என்ற நகரையமைத்து அதில் ஒரு சிவன் கோயிலையும் எடுப்பித்தான். தஞ்சை இராஜராஜேச் சரம் போலப் பெரியதாகக் கட்டினான். கட்டி முடித்ததும் ஒரு நாள் தன் அமைச்சரையழைத்து, கோயில் கட்ட எவ்வளவு தொகை செலவாயிற்று என்று சோழ அரசன் கேட்டான். அரசாங்க கருவூலத்திலிருந்து ஏராளமான பணம் எடுத்துச் செலவு செய்யப்பட்டிருந்தமையின் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. மறுநாள் சொல்வ தாக மன்னனிடம் கூறிச் சென்றார். விடிந்ததும் அரச னிடம் எப்படிக் கணக்குச் சொல்வது என்ற ஏக்கத்துடன் தன் வழிபாடு கடவுளாகிய விநாயகரை நினைத்தார். பொழுது புலர்ந்தது, அமைச்சரிடம் வேலைபார்க்கும் கருவூலக் கணக்கப்பிள்ளை வந்தார். கோயில்கட்டிடச் செலவுக் கணக்குகளுடன் வந்திருப்பதாகச் சொல்ல இருவரும் அரசனிடம் சென்றனர். கோயில் கட்டிடச் செலவுக் கணக்கை எடுத்துக் கணக்கப்பிள்ளை படிக்கத் தொடங்கினார். 'எத்து நூல் எண்ணாயிரம் பொன்' என் றார். 'போதும்; நிறுத்தும்' என்றான் சோழப்பேரரசன். பெருங்கற்களை உடைப்பதற்குக் கல்தச்சர்கள் சாயம் நனைத்த கயிறுகள்கொண்டு கற்களின் மேல் அடை யாளம் செய்து கொள்வார்கள். அந்தக் கயிற்றுக்கு எத்து நூல் என்று பெயர். எண்ணாயிரம் பொன்னுக்கு எத்து நூலே வாங்கப்பட்டது என்றால் கோயில் கட்டிமுடிக்க எவ்வளவோ பல இலட்சம் பொன்கள் ஆகியிருக்க வேண்டும் என ஊகித்த மன்னன் போதும் கணக்குப் படித்தது என்று நிறுத்தச் சொன்னான். அமைச்சர் மனக் கவலையும் தீர்ந்தது. அப்படிக் கணக்கராக வந்தவர் விநாயகப் பெருமான்தான். இப்போது கங்கைகொண்ட சோழபுரத்தில் கணக்கு விநாயகர் என்ற பேருடன் விளங்குகிறார்.

**படைத்த உணவை உண்டது :** திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரைப் பூசனை புரியும் அந்தணர் வேற்றூர் செல்ல நேர்ந்தது. தன் மகனை அழைத்து வழக்கப்படிப் பூசையை செய்யச் சொல்லிச் சென்றார். மறைச் சிறுவனும் நைவேத்தியத்துடன் சென்று பிள்ளை யார் முன் படைத்து ஆராதனை செய்துமுடித்தான். விநாயகர் அமுதை அருந்துவார் என்று நினைத்துக் காத்திருந்தான் இளைஞன். ஒன்றும் நடைபெறவில்லை. உணவை உண்ணாவிட்டால் மண்டையை மோதிக் கொள்வதாகச் சொல்லி முறையிட்டான். அவ்வளவில் ஆனைமுகன் துதிக்கையால் அமுதை அருந்தி சிறுவ னின் விருப்பத்தை முடித்தார். அந்த பிராமணக் குழந்தையே நம்பியாண்டார் நம்பி என்ற திருமுறை ஆசிரியர்.

**கண் கொடுத்தது :** திருவாசகத்தை அருளிய மணிவாசகப் பெருமான் அவதரித்தது திருவாதவூர் என்ற தலம். மாணிக்கவாசகரின் தாய் தந்தையர்க்கு வயது முதிர்ச்சியால் கண்ணொளி மழுங்கிற்று. அவ்வூரி லுள்ள விநாயகரை நாள்தோறும் தவறாமல் வழிபட்ட னர். கணபதியருளால் மீண்டும் கண்பார்வை பெற்ற னர். அவருக்கு முழிச்சிப் பிள்ளையார் என்று பெயர். திருவாதவூர் ஏரிக்கரையருகே அவருடைய கோயில் இருக்கிறது.

மாயூரம் என வழங்கும் திருமயிலாடு துறையில் கண் ஒளி இழந்த ஒருவர் ஐங்கரனை வழிபட்டுக் கண் பார்வையடைந்தார். ஆனைமுகனுக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டது. அதற்குக் கண் கொடுத்த பிள்ளையார் கோயில் என்று இன்றும் பெயர் வழங்கி வருகிறது.

விநாயகரின் திருவிளையாடல்களைப் பற்றி நாட்டில் இன்னும் பல கதைகள் வழங்குகின்றன. முக்கிய மான சிலவற்றை மட்டும் மேலே கண்டோம்.

''அல்லல்போம் வல்வினைபோம் அன்னை
வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் - நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத் துள்மேவு
கணபதியைக்கைதொழு தக்கால்''

கணபதியை நாளும் கைதொழுது வழிபட்டு உய்வடைவோமாக.

★★★

# ஸ்ரீ சாரதா புஜங்கம்

**- பாரதி தீர்த்த தாஸன்**

**2.**

*ஆண்டவன் அருளியுள்ள உடல் உறுப்புக்களை அவனுக்கே அர்ப்பணிப்பும் செய்ய வேண்டும். இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய முடியாத உடல்'' உன்னைப் பணியாத உடல் உப்பு வைத்த ஓட்டுப்பாண்டமா? ஓதியமரமா? நடைப்பிணமா? சுடுகாடா? அவசியமற்ற ஒரு சுமையா?'' என்கிறார் இராமலிங்கர்.*

உப்பிருந்த ஓடா? ஓதியோ? உலாப்பிணமோ?
வெப்பிருந்த காடோ? வினைச்சுமையோ? -
செய்யறியேன்
கண்ணப்பருக்குக் கனியனையாய்! நிற்பணியாது
உண்ணப் பருக்கும் உடம்பு.

**இறைவனைப் பாடாத *வாயை***

மணிகொண்ட கண்டனை வாழ்த்தாதார் வாய்
தெருமண்உண்ட வாய்.
பிணி கொண்டவாய் : விடப்பிச்சுண்டவாய்:
வரும் பேச்சற்ற வாய்:
துணிகொண்ட வாய்: அனல் சூடுண்ட
வாய்! மலஞ்சேர்ந்து இழிவாய்
குணிகொண்ட உப்பிலிக் கூழுண்ட வாயெனக்
கூறுபவே

**இறைவனைக் காணாத *கண்கள்***

தெண்ணீர் முடியினைக் காணாதார் தம் கண்கள்
இருள் சேர் குருட்டுக்
கண்ணீர் சொரிந்த கண்: காசக் கண் :
புன்முலைக்கண்: நகக் கண்.
புண்ணீர் ஒழுகும் கொடுங்கண்: பொறாமைக்
கண்: புன்கண்: வன்கண்
மண்ணீர் மையுற்றகண்: மாமணி நீத்த
கண்: மாலைக்கண்ணே.

*மூக்கு இறைவனது பணியில் எவ்வாறு ஈடுபடுகிறது என்பதை மிக அதிசயமான முறையில் அழகாக வர்ணிக்கிறார். பிஞ்ஞகன் என்று சிவ பெருமானது நாமத்தைக் கூறும் போது மூக்குக்கு வேலை; அது சொல்லாத மூக்குத்துளை எதற்கு என்கிறார்.*

**புல்லங்கனநீர்ப்புழை** என்கோ? புற்றென்கோ?
சொல்லும் பசுமட்டுளை என்கோ - சொல்லும் சீர்
வீயாத பிஞ்ஞகப் பேர் மெல்லினத்தின் நல்லிசைதான்
தோயாத நாசித்துளை.

*(புல்லங்கணநீர் - சாக்கடை நீர் ஓடும் துவாரம்).*

இறைவனது பெருமை கேளாத செவியை

கண்ணுதலான் புகழ் கேளார் செவி பொய்க்கதை
யொலியும்:
அண்ணுற மாதரும் மைந்தரும் கூடி அழும் ஒலியும்:
துண்ணெனும் தீச்சொல் ஒலியும்: அவ்வந்தகன்
தூதர்கள் மொத்து
உண்ணுற வாவென்று உரப்பொலியும் ஊன் செவியே.

*என்றார். இறைவனுக்காக சேவை செய்த உடலின் உறுப்புக்களைப் புகழ்ந்து பாடுகிறார்.*

ஐய! நின்சீர் பேசும் செல்வர் வாய் நல்ல தெள்ளமுது
உண்டு உவந்த திருவாய்
அப்ப! நின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்து ஓங்கி வாழும்தலை
மெய்ய! நின் திருமேனி கண்டபுண்ணியர் கண்கள்
மிக்க ஒளி மேவு கண்கள்:
வேல! நின்புகழ் கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும் செவி:
துய்ய நின் பதம் எண்ணும் மேலோர்கள் நெஞ்சம் மெய்ச்
சுகரூபமான நெஞ்சம்:
தோன்றல்! நின்திருமுன் குவிந்த பெரியோர்கைகள்
சுவர்ன்னமிடுகின்ற கைகள்
சைவமுயர் சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே!
தண்முகத்துய்யமணி உண்முகச்சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

*''உடல் புளகாங்கிதமடைய, சிரமேற்கரங் குவித்து, உள்ளத்தில் பொய்யை நீக்கி, உன்னைச் ''சய சய'' எனப்போற்றுகின்றேன்.'' என்று திரிகரண சுத்தியுடன் வணங்கும், தன்னை, நோக்கியருள வேண்டும்'' என மணிவாசகர் கேட்டருளினார்.*

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார்
கழற்கு என்
கைதான் தலைவைத்து: கண்ணீர் ததும்பி:
வெதும்பி உள்ளம்:
பொய் தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி
என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக்
கண்டு கொள்ளே.

இவ்வளவு கருத்துக்களையும் ஸ்ரீ சந்திரசேகர பாரதி மகாஸ்வாமிகள் ஒரே சுலோகத்தில் ''தாயே! என் உடல் சுதந்திரம் கொண்டாடுகிறது. எல்லா இந்திரியங் களும் அவ்வாறே செய்கின்றன. என்ன செய்வேன்? எங்கு செல்வேன். நான் வளர்க்கும் உடல் எனக்கு அடங்க வில்லையே: அவைகளை அடக்க நீதான் அருள் புரிய வேண்டும்'' என்கிறார்.

என் தேகம் கொண்டாடும் சுதந்திரம் யாவும்
என் செய்கேன்? ஐயகோ? எங்கு செல்கேனோ?
என் கையில் யான் பேணுவன ஏதும் இல்லையே.
என் வசங் கொணர்தியே அம்மை! அவைகளையே.

''அவனருளாலே அவன்தாள் வணங்கி'', என மணிவாசகர் கூறுவது போல், நம்புலன்களையே அடக்கு வதற்கு அம்மையருள் தேவை. அந்நிலையை வேண்டு வோமாக.

★★★

அப்பர் சுவாமிகள் அங்கமாலை என்ற தலைப் பில் ''தலையே! நீ வணங்காய்!'' எனத் தொடங்கி உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் இறைவனை வணங்கப் புத்தி கூறினார். இறைவனை இடையறாது நினைக்கும் மனத்தையும் பாடிமகிழும் நாக்கையும் ''வாழிய மனனும் மணிநாவும்மே'' என வாழ்த்தினார் குமரகுருபர சுவாமிகள் . ''அம்மைக்குச் சேவை செய்யும் தேவமாதர்களும் திருமகளும் கலைமகளும் அவ்வாறு சேவைசெய்ய என்ன புண்ணியம் செய்தார்களோ?'' என்றார் இராமலிங்க சுவாமிகள்.

பையாளும் அல்குற் சுடர் மடவார்கள் பலருளும் இச்
செய்யாளும் வெண்ணிற மெய்யாளும்
எத்தவம் செய்தனரோ?
கையாளும் நின்னடிக்குற்றேவல் செய்யக்
கடைக்கணித்தாய்
மையாளும் கண்ணெற்றி வாழ்வே!
வடிவுடைமாணிக்கமே.

என்றார். இறைவனுக்குச் சேவை செய்யாத உடல் உறுப்புக்கள் எதற்கு என்கிறார்.

அன்புடன் நின் பதம் புகழாப் பாவி நாவை
அறத்துணியேன்: நின்னழகை அமர்ந்து காணாத்
துன்புறு கண் இரண்டினையும் சூன்றேன்: நின்னைத்
தொழாக் கையை வாளதனால் துண்டமாக்கேன்:
வன்பற நின்றனை வணங்காத் தலையை அந்தோ!
மடித்திலேன்: ஒதியே போல் வளர்ந்தேன்: என்னை
இன்பருவல் எரியிடை வீழ்த்திடினுமன்றி
என் செயினும் போதாதே! எந்தாய்! எந்தாய்!

மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் மரண மென்பது உண்டு. அது எப்போது என்று அறியமுடிய வில்லை. பரிட்சித்து ராஜன் ஒருவன் மட்டும் ஏழு நாட்களில் மரணம் என்பதறிந்து சுகப்பிரம்ம ரிஷி என்ற பெரியவரைஅடைந்து ''என் உயிர்நீங்கு முன்நல்ல சொல் கேட்க வேண்டும்'' எனவேண்டி பாகவத புராணங் கேட்டு ஏழாம் நாள் மறைந்தார். ஏழுநாட்களும் தெய்வீக சிந்தனையிலிருந்ததால் முத்தியடைந்தார்.

எந்நேரமும் இறைவனையே நினைத்துக் கொண் டிருந்தால் நம்மையறியாமல் நம் முடிவுகாலத்தும் அவனை நினைக்க முடியும். இந்த நிலையைத்தான் **நினையாமல் நினைத்தல், கருதாமறவா நெறி** என் பர். மறந்தால் தானே நினைக்க வேண்டியுள்ளது. எந்நேரமும் இறைவனை மறவாமல் இருக்க வேண்டும் என்பது குறிப்பு.

மனம் அடங்காததாக இருக்கலாம்; அதற்காக அதன் வழியே விட்டு விடலாமா? பொல்லாத மகன் என்பதற்காகத் தாய் மகனை விட்டுவிடுவதில்லை. திருந்த வேண்டுமெனத் தண்டிக்கிறாள். ''நான் பொல் லாதவனாயிருந்தாலும் எனக்கு நீரே தந்தையாதலினால் என்னை நல்வழிப்படுத்துவது தங்கள் கடமையல்லவா? தந்தையும் மகனும் வழக்கிட்டுக் கொள்ளலாமா?'' என்கிறார்.

சழக்கிருந்தது என்னிடத்திலாயினும் நீர்
தந்தையாதலின் சார்ந்த நன்னெறியில்
பழக்கி வைப்பது தேவரீருக்கு உரிய
பண்பன்றோ? எனைப்பரிந்திலீரானால்
வழக்கிருப்பது இங்கு உமக்கும் என்றனக்கும்
வகுத்துக் கூறுதல் மரபு மற்றன்றால்
புழைக்கைமாவுரியீர்! ஒற்றியூருடையீர்!
பொய்யன் என்னில் யான்போம் வழி எதுவோ?

''அம்மையே! ஐம்புலன்களும் உன்னிடமே ஈடு பட்டுவிட்டது என்றால் எனக்கு ஏது கவலை'' என்கிறார் மகாவித்வான் பிள்ளையவர்கள்.

ஒப்பில் நின்புகழே கேட்க என் செவிகள்!
ஓங்கு நின்னுருவமே காணக்கண்
தப்பி நின்றனையே பாடட வாய், கை
தவாது நின் அடிபணியாற்ற
இப்படியுறுமேல் செங்கதிருதயம்
எத்திசை உறினும் மற்றென்னே
கப்பினார் தருக்கள் சூழ் திருவானைக்கா
அகிலாண்ட நாயகியே.

இவ்வளவு கருத்துக்களையும் ''எனது உடல், மனம், இந்திரியங்கள் என்றைக்காவது உனக்குப் பூஜை, தியானம், தரிசனம் செய்யும் தன்மையை அடையு மென்றெண்ணியே அவற்றைப் பேணிவருகிறேன். அடி யேன் பொய் கூறவில்லை. விரைவில் எனக்குக் கருணை புரிக'' என வேண்டுகிறார் ஸ்ரீ ஆசாரியார்.

அம்மை! நின் பொன்னடிகள் பூசை தியானம்
ஆற்றவும் காணவும் ஆகுமிங்கு என யான்
செம்மையிற் பேணினேன்: புலன்மனம் காயம்
சீக்கிரம் காத்தருள் செப்புகிலேன் மாயம்

★★★

எந்த நல்ல பயிற்சியையும் இளமையிலே கைக் கொள்ள வேண்டும். அதனாலேயே **''இளமையில் கல்''** என்பது முதியோர் வாக்கு: தாயோ தந்தையோ அடித் தாலும் ''அம்மா, அப்பா'' என அவர்களின் கால்களையே கட்டிக்கொண்டு கண்ணீர் விடும் குழந்தைகள். ''தாயார் கோபத்தில் கைவிட்டாலும் அவளது கருணையை நினைத்தே குழந்தை அழுவது போல், இறைவனே! நீ எவ்வளவு சோதித்தாலும் உன்னை விடமாட்டேன்'' என்றார் குலசேகர ஆழ்வார்.

அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றும்
அவள்தன்
அருள் நினைந்தே அழும் குழவி
அதுவே போன்று இருந்தேனே

என்றார்.

எவ்வளவு குழந்தையானாலும் நல்வினையிருந் தால் இறைவனது அருள் கிட்டி விடும். ஆனால் இருளில் (அறியாமையில்) அழும் குழந்தை போன்றுள்ளேன்.

விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந்து அழுது
விம்முகின்ற குழந்தையினும் மிகப்பெரிதும்
சிறியேன்

எனத் தன்னைப்பற்றிக் கூறுகிறார் இராமலிங்க சுவாமிகள்.

நல்வினைப்பயனிருந்தால் ஞானசம்பந்தர் சீர்காழி யில் அழ அம்மையப்பர்கள் எதிரில் தோன்றி ஞானப்பால் அளித்தனர். இதனால் **அழுதபிள்ளைபால் குடிக்கும்** என ஒரு பழமொழியே ஏற்பட்டது. இந்த வரலாற்றை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ''அழுத பிள்ளைக்குப் பால் கொடுத்தார் சிவபெருமான். அழக் கூடத் தெரியாத குழந்தைக்கும் தாய் தந்தையர் கருணை கொண்டு பாலளிப்பர். அத்தகைய குழந்தையான எனக் குப் பாலளித்துக் காக்க வேண்டாமா?'' என்கிறார். அம்மை ஞானசம்பந்தருக்குப்பால் அளித்தாள். சிதம்பரத் தில் வியாக்ரபாதரின் மகனான உபமன்யுவுக்கு பாற் கடலையே வரவழைத்துப் பசி நீக்கினார் நடராஜப் பெருமான்.

பாலுக்கு பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல்
ஈந்த பிரான்

என்று ஒன்பதாம் திருமுறையில் பல்லாண்டில் கூறி யருளினார்.

சிறு குழந்தைகளான போதிலும் ஞானசம்பந்தர், உபமன்யு, நடு இளமையில் மார்க்கண்டர் முதலானவர் இறைவனருள் பெற்றனர். ஸ்ரீ சந்திர சேகர பாரதி மகா ஸ்வாமிகள் ''சிறுவயதில் உனை நினைக்கும் பாக்யம் கிடைக்கவில்லை என்பது உண்மை. சிறியேனாகிய என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். உன்னைத் தவிர எனக்கு யார் உள்ளார்?'' என அம்மையிடம் வேண்டு கிறார்.

இளம் வயதிலிருந்து பக்தி செய்யும் பழக்கம் ஏற் படுத்திக் கொண்டு நம் சந்ததிகளையும் அவ்வாறே பழக்கி, தெய்வீக அருள் பெற்று எல்லோருடைய குடும் பங்களும் நல்வாழ்வு வாழ அம்மை சாரதாம்பிகையை வேண்டுவோமாக!

என் பாலமையில் உன்றன் இணை நளினபாதம்
எண்ணினேனிலை என்பது வாய்மையாகும்
என் பாலபிழை தாங்குவாய் கருணை வாரீ!
எனையாள உனையன்றி இலை வேறுயாரும்.

ஸ்ரீ சற்குரு நாதர் திருவடிகளே சரணம்

அம்மை சாரதாம்பாள் அனைவருக்கும் அருள்க!

★★★

''அம்பிகையைச் சரண் அடைந்தால்
அதிக வரம் பெறலாம்''

- மகாகவி பாரதியார்

# கொடிகள்

- டாக்டர் டி. செல்வராஜ்

*மிகப்பழைய கொடிகள்:* வீணைக்கொடி இராவணனுக்கு உரியது. இவன் இசையில் வல்லவன் என்ற கருத்துக்குக் கொடியின் இலச்சினையான வீணை ஒரு சான்று.

பீமன் திரௌபதிக்காக, சௌகந்தி என்ற மலரைப் பறித்து வரக் காட்டுக்குள் நுழைந்தான்.

சற்றுத்தூரத்தில், பீமன் சென்ற வழியின் குறுக்கே ஒரு கிழக்குரங்கு படுத்துக் கொண்டிருந்தது.

பீமன், வழியை விட்டு விலகியிருக்குமாறு அதை ஏவினான். தான் வாயு புத்திரன் என்பதையும், தனது பராக்கிரமங்களையும் எடுத்துக் கூறினான்.

கிழக்குரங்கின் முகத்தில் புன்னகை பூத்தது. மனம் கனிந்தது. ஆனால், விலகி வழிவிடவில்லை. ''என்னைத் தாண்டிச் செல்வாய்'' என்று பீமனிடம் கூறியது.

''ஒரு விலங்கைத் தாண்டிச் செல்லக்கூடாது. இது சாத்திரம் வகுத்த சட்டம். இல்லாவிட்டால், அனுமன் கடலைத்தாண்டியதைப் போல, நானும், உன்னையும் இந்த மலையையும் ஒருங்கே தாண்டிச் செல்வேன்'' - என்றார் பீமன்.

''கடலைத்தாண்டிய அனுமனா? யார் அவன்?'' - கிழக்குரங்கு.

''இராமனின் மனைவியான சீதையைத் தேடிக் கடலைத் தாண்டியவன். என் அண்ணன் அனுமன். அனுமனை உனக்குத் தெரியவே தெரியாதா?'' - பீமன்.

''சரி. என்மீது கோபப்படாதே. நானோ வயது முதிர்ந்தவன். என்னால் எழுந்திருக்கவும் முடியவில்லை. எனது வாலைச் சற்று நகர்த்தி விட்டு வழியின் ஓரமாக ஒதுங்கிச் செல்வாய்'' - கிழக்குரங்கு.

பீமன் எவ்வளவு முயன்றும், அவனால் வாலைத் தூக்கவோ, நகர்த்தவோ முடியவில்லை. பீமன் வியந்தான்; பயந்தான்; நயந்தான். ''நீ யார்'' என்று கேட்டான்.

''நான் தான் வாயு புத்திரன் அனுமன். இந்த வழியில் நீ சென்றால் உனக்குப் பலரால் துன்பங்கள் வரும். இவற்றைத் தடுக்கவே நான் உனது வழியின் குறுக்கே படுத்துக் காத்தேன். நீ தேடுகின்ற சௌகந்தி மலர்கள் அதோ - அங்கே நீரோடைக்குப் பக்கத்தில் உள்ளன. பறித்துச் செல்வாய்'' என்று கூறிய அனுமன், பீமனுக்குத் தனது விசுவரூபத்தைக் காட்டியருளினார்.

விசுவரூபத்தைக் கண்ணாரக் கண்டு, மனமார மகிழ்ந்து, கையார வணங்கினான் பீமன்.

''பீமனே! நீ போர்க்களத்தில் சிங்கநாதம் செய்யும் போது எனது குரலும் அதனுடன் சேர்ந்து பகைவர்களைப் பயமுறுத்தும். மேலும், நான் அருச்சுனனின் தேர்க் கொடியில் இருப்பேன்'' என்று அனுமன் வரமருளினார்.

பீமனும் வணங்கிச் சௌகந்தி மலர்களைப் பறித்துச் சென்றான்.

அருச்சுனனின் கொடி இலச்சினையாக அனுமன் வீற்றிருந்ததற்கான புராண வரலாறு இது.

அனுமன் அருச்சுனனின் தேர்க்கொடியில் வீற்றிருந்ததால், ஸ்ரீ கிருஷ்ண பகவான், அருச்சுனனுக்குப் பகர்ந்தருளிய பகவத் கீதையைக் கேட்டுணரக்கூடிய பாக்கியம் அனுமனுக்கும் கிடைத்தது.

மேற்கண்டவற்றால் கொடிகள், இராமாயண, மகாபாரதக்காலப் பழமையானவை என்பது விளங்குகின்றது.

மேலும், ஒவ்வொரு கொடியின் இலச்சினைக்கும் ஒவ்வொரு கருத்துப் பின்னணியோ, கதைப் பின்னணியோ உறுதியாக உண்டு என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

பழங்காலத்தில், கொடியின் வண்ணத்தைவிட அதன் இலச்சினைக்கே முக்கியத்துவம் தரப்பட்டது.

இக்காலத்தில், கொடியின் வண்ணத்துக்கே முக்கியத்துவம் - சில போது, இலச்சினைக்கும் முக்கியத்துவம் உண்டு.

★★★

**கொடி :** கொடி என்ற சொல்லுக்கு ''நீண்டது'' என்பது பொருள்.

தாவரத்தின் வகையொன்று நிலத்தில் நீண்டு படர்வதால் அதற்குக் ''கொடி'' என்ற பெயர் அமைந்தது.

நீண்ட கம்பில், காற்றில் அலையுமாறு கட்டப்பட்ட நீண்ட துணிக்கும் ''கொடி'' என்பது பெயர்.

மிக மிக நீண்ட கொடியைப் ''பதாகை'' என்று அழைப்பது வழக்கம். ''துவசம்'' என்பதும் கொடியைக் குறிக்கின்ற ஒரு வடசொல்.

**1) அலங்காரக் கொடிகள்**

தொடக்கக் காலத்தில், கொடிகள் அலங்காரப் பொருள்களாகவே இருந்தன. வீடுகளையும், வீதிகளையும், மாடங்களையும், மாளிகைகளையும் அலங்கரிக்கப் பல வகைப்பட்ட கொடிகள் பயன்பட்டன. இவை அலங்காரக்கொடிகள், இக் கொடிகளின் நடுவில் இலச்சினைகள் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. இவை முழுக்க முழுக்க அலங்கார நோக்குடையவை. பற்பல வண்ணங்களில் திகழ்பவை.

**2) அடையாளக் கொடிகள்**

அடையாளக்கொடிகள் அரசர்களுக்கு உரியன. ஒவ்வோர் அரசருக்கும் தனித்தனி இலச்சினைகள் வரையப்பட்ட கொடிகள் இருந்தன. இவை கோட்டைகள், அரண்மனைகள், மாளிகைகள் முதலான இடங்களில் பறந்தன.

அடையாளக் கொடிகள் பழமை வாய்ந்தவை. இக்கொடிகளில் காணப்படுகின்ற அடையாள இலச்சினைகள் மிக முக்கியமானவை. இவை வரலாற்று மூலங்கள் ஆகும். பொதுவாக, ஓர் அரசரது இலச்சினையை மற்றோர் அரசர் தமக்குரியதாக ஏற்றுக் கொள்வதில்லை. சில உதாரணங்கள் வருமாறு:-

துரியோதனனுக்குரியது பாம்புக்கொடி; அவனது பண்புக்குப் பொருத்தமான இலச்சினைதான்.

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய அரசர்களுக்கு முறையே வில், புலி, மீன் என்ற இலச்சினைகள் பொறித்த கொடிகள் இருந்தன. வில்லும், புலியும் வீரப் பெருமிதத்தின் சின்னங்கள்; செல்வ வளபத்தின் சின்னம் மீன்.

பல்லவர்களில் பலர் சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள். எனவே, இவர்களுக்குரியது ''காளைக்கொடி''.

***தசாங்கம்:*** அரசர்களுக்கு 1. மலை 2. ஆறு 3. நாடு 4. ஊர் 5. மாலை 6. குதிரை 7. யானை 8. முரசு 9. கொடி 10. செங்கோல் ஆகிய பத்தும் அங்கங்கள் ஆகும். இவற்றைத் ''தசாங்கம்'' என்பர். இவை பத்தையும் பாடுகின்ற சிறுபிரபந்தத்தின் பெயரும் ''தசாங்கம்.'' தசாங்கத்தில் ஓர் அங்கம் 'கொடி'. எனவே இது முக்கியமானது.

அரசனுக்குரிய கொடி மரியாதைக்குரியது; வணக்கத்திற்குரியது; ஆனால் முறையான வழிபாட்டுக்கு உரியதன்று. வழிபாட்டிற்குரியன ஆன்மீகக் கொடிகள். இவை தெய்வீகக் கொடிகள்.



**3) ஆன்மீகக் கொடிகள்**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெய்வங்களுக்குத் தனித்தனி கொடிகள் விதிக்கப்பட்டன. இக்கொடிகளைச் சங்க இலக்கியங்கள் பலவாறு சிறப்பித்துப் பாடுகின்றன.

பொதுவாக, தெய்வங்களின் வாகனங்களே அவர்களது கொடி இலச்சினைகளாக இருப்பது மரபு.

சிவனின் வாகனம், கொடி - நந்தி
திருமாலின் வாகனம், கொடி - கருடன்

இந்த மரபு சிலபோது மீறப்படுகிறது.

முருகனின் வாகனம் மயில்; கொடி சேவல்.
பலதேவனின் வாகனம் யானை; கொடி பனைமரம்.

முன்னர், சிவன், திருமால், முருகன், இந்திரன் முதலிய தெய்வங்களுக்குத் தனித்தனி கோயில்கள் இருந்தன. அவற்றின் வாயில்களுக்கு மேலும், மூலவருக்கு நேர் எதிரிலும் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

தெய்வங்களின் தனித்தனி கொடிகள், அவரவர் கோயில்களில் அழகாகப்பறந்தன. கோயில் கொடிகளைத் தரிசித்தவர்கள் 'இது இந்தத் தெய்வத்தின் கோயில்' என்பதை எளிதில் தெரிந்துகொண்டனர்.

இதனால், கோயில்களுக்கு கொடிகள் நிச்சயமாகத் தேவைப்படுகின்றன என்பது தெளிவாகின்றது.

அரசர்களுக்குரிய அடையாளக் கொடிகள் தெய்வங்களுக்குரிய ஆன்மீகக் கொடிகளாக மாறின.

அரசர்களுக்குச் செய்த உபச்சாரங்களை, அடியார்கள் தெய்வங்களுக்கும் செய்து மகிழ்ந்தனர்.

அரசர்கள் துயிலெழுப்பாடியதைப் போலத் தெய்வங்களும் துயிலெழத் 'திருப்பள்ளியெழுச்சி' பாடினர்.

தெய்வங்களுக்குக் கிரீடத்தைப் புனைந்தனர். விலையுயர்ந்த மாலைகளைச் சூட்டினர். ஆடை, அணிகளால் அலங்கரித்தனர். 'ராஜ வேடம்' புனைந்து தரிசித்தனர்.

அரசர்களிடம் இருப்பதைப் போலத் தெய்வங்களிடமும் பல ஆயுதங்கள் உண்டு. இவர்கள் யானை, குதிரை, பல்லக்கு, தேர் முதலான வாகனங்களில் பவனி உலா வந்தனர்.

பிறந்தநாள், திருக்கல்யாணம், பட்டாபிடேகம் முதலியன தெய்வங்களுக்கும் நிகழ்ந்தன.

மேற் கண்டவையும், மற்றவையும் தெய்வங்களுக்கு அடியார்கள் - செய்த - செய்கின்ற - செய்யும் 'ராஜ உபச்சாரங்கள்' ஆகும்.

அரசர்களுக்குரிய தசாங்கம், காலப் போக்கில் தெய்வங்களுக்கும் உரியனவாக அமைந்தன. உலா முதலிய பல வகைப் பிரபந்தங்களில் தெய்வங்களின் தசாங்கத்தைப் பாடுவது ஒரு மரபு.

தசாங்கத்தின் ஓர் அங்கம் கொடி என்பதை முன்னரே அறிந்தோம். அரசர்களுக்குத் தனித்தனி அடையாளக் கொடிகள் இருப்பதைப் போலத் தெய்வங்களுக்கும் தனித்தனி ஆன்மீகக் கொடிகள் அமைந்தன. இவையே கோயில்களிலும், வாயில்களிலும் கம்பீரமாகப் பறந்தன. திருவிழாக்காலங்களில் ஏற்றப்பட்டன.

## கொடிகளால் தோன்றிய பெயர்கள்:

கொடிகளின் பெயர்களோடு சார்த்தித் தெய்வங்களின் பெயர்கள் சில வழங்குகின்றன.

'கருடக்கொடியன்' என்பது திருமாலின் பெயர்.

சேவற் கொடியன், கோழிக் கொடியன் முதலியன முருகனின் பெயர்கள்.

இத்தகைய தெய்வப் பெயர்கள், கொடிகளுக்கு ஓர் ஏற்றம் தருவதை நுட்பமாகக் காணலாம்.

அலங்காரக் கொடிகள் - அடையாளக் கொடிகள் - ஆன்மீகக் கொடிகள் என்பன கொடிகளின் வளர்ச்சிப்படிகள் ஆகும். இவற்றை இதுவரை கண்ட பின், முக்கியமான மற்றொரு வளர்ச்சியைக் காண வேண்டும்.

தெய்வமே கொடியேந்தித் திருக்காட்சி தருகின்றது.

கொடியேந்திய முதல் தெய்வம் முருகன்.

## கோழிக்கொடியன் : முருகன்:

மயில் கொடியும், சேவல் கொடியும் முருகனுக்குரியன. ஒரு தெய்வத்திற்கு இரண்டு கொடிகள் இல்லை. முருகனுக்கு மட்டும் உண்டு.

மயில் வாகனனுக்கு மயில் கொடி இருப்பதே பொருத்தமானது; வாகனம், கொடியாக இருப்பதே மரபும் முறையும் ஆகும். முருகனது கோயில்களில் மயில் கொடியே ஏற்றப்படுகின்றது.

முருகனது திருமேனியின் வலப்பக்கம் வேலும், இடப்பக்கம் சேவல் கொடியும் பொலிகின்றன. முருகனுக்கு ஏற்ற ஒரு கொடி - மயில்கொடி; ஏந்த ஒரு கொடி - சேவல் கொடி.

முருகன் சூரபத்மனை இரு கூறுகளாகப் பிளைந்தான். ஒரு கூறு மயில் ஆயிற்று; இது முருகனின் வாகனம்; கொடி. மறு கூறு சேவல் ஆயிற்று; இது முருகனின் கொடி. சேவல் கொடி முருகனுக்கு அமைந்த வரலாறு இது.

சேவல், சிவபெருமான் அருளியது; சூரியன் கொடுத்தது; அக்னி அளித்தது; வேடர் குலத்தினர் வள்ளிக்குத்தந்த சீதனப் பொருள் - என்று சேவல் கொடியைப் பற்றிய புராண வரலாறுகள் பல உள்ளன. இவை சேவல் கொடியின் மகிமைகளை மேன்மேலும் கூடுதலாக்குகின்றன.

முருகனது திருமேனிகள் பதினாறு. இவற்றில், 1. தேவசேனாபதி 2. சுப்பிரமணியர் 3. கஜவாகனர் 4. சரவண பவன் 5. குமார சுவாமி 6. சண்முகன் 7. தாரகாரி என்ற திருமேனிகளில், கொடியேந்திய திருக்கை ஒன்று அமைந்திருக்க வேண்டும் என்பது விதி.

இயல்பாகவே முருகனது திருமேனிகள் பலவற்றில் கொடி இல்லை. ஆகவே, தங்கம் வெள்ளி முதலான

உயர்ந்த உலோகங்களால் கொடிகளைச் செய்து, திருமேனியின் இடப்பக்கம் சார்த்தி அலங்கரிக்கின்றனர். உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கொடிகள், பல கோயில்களில் உள்ளன.

வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட தனி வேலை வழிபடலாம், தனிக் கொடியை வழிபடும் வழக்கம் இல்லை. முருகனது திருமேனியில் சார்த்தியே கொடியை வழிபட வேண்டும்.

## சேவல் கொடி மரம்

சேவல் கொடிக்கு மற்றொரு மகிமை இருக்கிறது. பித்தளை அல்லது செப்பால் செய்யப்பட்ட சேவல் கொடி மரம் ஒன்று, மூலவர் முருகனுக்கு நேர் முன், மயில் வாகனத்திற்குப் பின் அமைந்திருப்பதை முருகன் கோயில்கள் - சன்னிதிகள் பலவற்றில் காணலாம்.

கொடியிலுள்ள சேவல் முருகனை அண்ணாந்து நோக்கி, மெய் சிலிர்த்துத் தரிசித்தபடி இருக்கும். தீப ஆராதனை முதலிய முக்கியமான காலங்களில், அந்தக் கொடியின் மீது, உயிருள்ள சேவல் அமர்ந்து, முருகனைத் தரிசிக்கின்ற அற்புதத் திருக்காட்சியைப் பழனி, சேலம் குமரகிரி முதலிய பல இடங்களில் பார்த்துப் பரவசமடையலாம்.

**சேவல் :** சேவல் பிரணவ வடிவம். முருகன் சிவனின் காதில் பிரணவத்தை உபதேசித்தார். அந்த முருகனது இடக்காதில் பிரணவத்தை இடையறாமல் கூறிக் கொண்டிருக்கிறதாம் சேவல்.

முருகன் சேவல் கொடியை ஏந்தாமல், சேவலை ஏந்திக்கொண்டிருக்கின்ற அபூர்வமான திருமேனிகள், தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் முதலிய திருத்தலங்களில் காணப்படுகின்றன.

**விநாயகர் :** முத்கல புராணமும், ஸ்ரீ தத்துவ நிதியும் விநாயகரது முப்பத்திரண்டு திருமேனிகளை வரையறுத்தன. இவற்றுள் 1. வீர கணபதி 2. ஏகாட்சர கணபதி 3. துர்க்கா கணபதி ஆகிய மூன்றும், கொடியேந்திய திருக்கையைக் கொண்ட திருமேனிகள் ஆகும். வேறு திருமேனிகளில் கொடியில்லை.

**மற்ற தெய்வங்கள்:** சிவன், திருமால் முதலிய தெய்வங்களின் கைகளில் கொடி இல்லை.

பெண் தெய்வங்களின் கைகளிலும் கொடி இல்லை.

ஆகவே, முருகனது திருமேனிகள் பல, விநாயகரது திருமேனிகள் சிலவற்றைத் தவிர மற்றத் தெய்வங்களின் திருமேனிகளில் கொடிகள் இருப்பதாக வடிக்கும் வழக்கம் இல்லை. கொடியேந்தி விளையாடுகின்ற தெய்வங்கள் இவர்கள் இருவரே.

**கொடியைப்பற்றிய நூல் :** கொடியைப்பற்றிய ஒரே நூல் ''சேவல் விருத்தம்'' என்ற நூலாகும். இதனை இயற்றியவர் அருணகிரிநாத சுவாமிகள். இந்நூல் பதினொரு பாடல்களைக் கொண்டது. சேவல் கொடியை வணங்கும் முறையில், ''சேவல் திருத்துவசமே'' என்ற தொடரை ஒவ்வொரு பாடலிலும் காணலாம்.

சேவல், சேவல் கொடியைப்பற்றிய பாடல்கள் கந்தரலங்காரம் முதலிய பல நூல்களில் உள்ளன.

**கொடி - உட் பொருள்கள் சில :** கொடி வெற்றியின் சின்னம்; ஆதிக்கத்தின் அடையாளம்; ஆட்சியின் அறிகுறி.

மூவுலகையும் அடக்கி ஆளுகின்ற பேராற்றலுடையது தெய்வம் என்பதை எடுத்துக் காட்டுகிறது கொடி. வெற்றிக் கொடியேந்திய தெய்வத்திற்குப் பகைவரும் இல்லை; அஞ்ஞானம், அகங்காரம் முதலிய பகைமையும் இல்லை. தானே எல்லாம்; தானே முழுமுதல்; தானே பரம்பொருள்.

மும்மலங்களை வென்று வெற்றிக்கொடி நாட்டிய ஆன்மாக்களே அப்பரம் பொருளை அடைய முடியும் என்பதை உணர்த்துகின்றது கொடி. இவ்வாறு கொடி உணர்த்தும் உட்பொருள்கள் பல உள்ளன.

**பண்டைக்காலப் பல்வகைக் கொடிகள் :** பண்டைக்காலத்தில் பல்வகைக் கொடிகள் பறந்தன. சிலவற்றைக் காணலாம்.

கடைவீதிகளில் பல வண்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டன. ''இந்தப் பொருள்கள் இங்கே கிடைக்கின்றன'' என்பதை வணிகர், கொடிகளின் மூலமாகவே உணர்த்தினர்.

கள்ளுக்கடைக்கும் தனிக்கொடி இருந்தது.

இலக்கிய அல்லது சமய வாதம் செய்ய விரும்பிய சான்றோர் ஏற்றியது 'கல்விக்கொடி'

பல பொருள்களைத் தானம் செய்கின்ற இடத்தில் பறந்த கொடி 'தியாகக் கொடி.'

திருவிழாவுக்காக ஏற்றியது விழாக்கொடி. போருக்குச் சென்றவர் ஏந்தியது போர்க்கொடி. போரில் வென்றவர் நாட்டியது வெற்றிக்கொடி.

★★★

# ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி

– திருமதி மீனாட்சி கோகுலவாசன்

திருமாலின் ஒன்பதாவது அவதாரமாகும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம். ஸ்ரீராமாவதாரத்தில் அவரால் விடப் பட்ட சில அரும்பெரும் செயல்களை, ஸ்ரீ கிருஷ்ணா வதாரத்தில் திருமால் உபதேச மொழியாக எடுத்துரைத் தார். 125 ஆண்டுகளே இப்பூவுலகில் வாழ்ந்திருந்தாலும், அவர் செய்த செயல்கள் கணக்கில் அடங்காதவைகள். பிறக்கும் பொழுதே, தான் திருமாலின் அவதாரம் என்பதை வெளிக்காட்டினார். உலகில் மலிந்து கிடந்த தீயச்செயல்களை மாய்த்து, நன்னெறிகளைப் பரப்பினார். அதேபோல் தீயவர்களை ஒழித்து, நல்லவர்களைக் காத்தருளினார்.


பூமாதேவியும், ''தீயவர்களின் செயலால், அச் சுமையைத் தாங்காமல், நீரில் மூழ்கும் நிலையில் உள்ள என்னைக் காக்க வேண்டும்'', என்று பிரம்மதேவனிடம் முறையிட்டதன் பலனாகவும், இவ்வவதாரம் எடுக்க வேண்டியதானது.

முன்பு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நடந்தது. அந்தப் போரில் திருமாலின் உதவியால் தேவர் கள் வெற்றி பெற்றனர்; அசுரர்கள் கொல்லப்பட்டனர். திருமாலின் திருக்கரத்தால் கொல்லப்பட்ட பல அசுரரர் கள் வீடுபேற்றை அடைந்தார்கள். காலநேமி போன்ற சில அசுரர்கள், மிஞ்சிய கர்மத்தால், பூமியில் 'கம்சன்' போன்றவர்களாகப் பிறந்தனர். அந்த அசுரர்களின் சுமை தாங்க முடியாமல் பூமாதேவி, பிரம்மதேவனிடம் முறையிட்டதை முன்பே தேவர்களும் கூறியிருந்தார்கள். அதற்கு பிரம்ம தேவனும் ''பூமாதேவியின் முறையீட்டை அறிவேன்; தேவர்களையும், பூமாதேவியையும் காப்ப தற்கு திருமாலே தகுதியுள்ளவர். ஆதலால் நாம் எல் லோரும் பாற்கடலுக்குச் சென்று, நாராயணனை வணங்கி முறையிடுவோம்'', என்றார். அதன்படி எல்லோரும் சென்று முறையிட்டனர். ''அசுரர்கள் மனிதப்பிறவிகள் எடுத்து, தேவர்களுக்கும், மூவுலகத்தாருக்கும் துன்பம் இழைக்கிறார்கள். அதற்குச் செய்ய வேண்டியது எதுவோ அதனை நியமித்து அருள் செய்ய வேண்டும்'', என்று பிரம்மா பிரார்த்தித்தார். திருமாலும், ''பயத்தை அளிக்கும் கம்சன் போன்ற அசுரர்களால் பூமிக்கும் தேவர்களுக்கும் ஏற்பட்ட துயரத்தைப் போக்கி, அவர்களை அழிக்க, நான் யாதவகுலத்தில் முழு அம்சத்துடன் அவதரிக் கிறேன்; தேவர்களும், தேவப்பெண்களும் ஓர் அம்சத் துடன் என்னைப் பூஜிப்பதற்காகப் பிறக்கட்டும்'' என் றருளினார்.

இதைக்கேட்ட தேவர்கள் நிம்மதியுடன் தங்கள் இருப்பிடம் சென்றனர்.

எம்பெருமான் சகல லோகங்களையும் மோகிக் கத்தக்க யோகநித்திரை என்ற தமது மாயையைப் பார்த்து, ''ஓ, மாயா! பாதாளத்தில் இருக்கிற, 'இரண்யகசிபுவின் குமாரர்கள் அறுவரையும், தேவகியின் கர்ப்பத்தில் சேர்ப்பாயாக! அந்த அறுவரும் சங்கரிக்கப்பட்டவுடன், எனது அம்சமாக இருக்கும் ஆதிசேஷன் தேவகியின் ஏழாவது கர்ப்பத்தில் பிறப்பான்; வசுதேவனின் பத்தினி யான ரோகிணி என்பவள் நந்தகோபனுடைய கோகுலத் தில் இருக்கிறாள். அவளுடைய வயிற்றில் இருக்கும் வாயுரூபமான, ஏழுமாத கர்ப்பத்தை கலைத்து விட்டு, தேவகியின் வயிற்றில் இருக்கும் சேஷ அம்சமான ஏழுமாத கர்ப்பத்தைக் கொண்டுபோய், ரோகிணியின் கர்ப்பத்தில் சேர்ப்பாயாக. நான் என்னுடைய அம்ச மாகிய சங்கு, சக்கரத்துடன் தேவகிக்குப் பிள்ளையாகப் பிறக்கப் போகிறேன். நீயும் நந்தகோபனுடைய மனைவி யான யசோதைக்குப் பெண்ணாகப் பிறக்க வேண்டும். அவரவர் விரும்புகிற வரங்களை எல்லாம் அளிக்கும் உன்னை, மனிதர்கள் பலவகையாக ஆராதிப்பார்கள். பூவுலகில் உனக்கு ஆலயங்கள் தோன்றும். உன்னை, ஆரியை, துர்க்கை, வேதகர்ப்பை, பத்தரை, பாக்கியதை, பத்ரகாளி, விஜயா, வைஷ்ணவி, குமுதா, சண்டிகை, கிருஷ்ணை, மாதவி, கன்னிகா, மாயா, நாராயணி, ஈசானை, சாரதை, அம்பிகை என்ற திருநாமங்களால் அழைப்பார்கள்'' என்றார். மேலும், 'இப்பொழுது நான் சொன்ன காரியங்கள் எல்லாம் என் அருளால் அப்படியே முடியும் என்று நிச்சயமாகக் கூறியருளினார்.

மதுரா நகரத்தின் அரசனான வசுதேவர், தேவகியை மணந்து கொண்டார். மணம் முடிந்தபின், தேவகியையும், வசுதேவரையும் ஊர்வலமாக வீதியில் அழைத்துச் சென்றார்கள். கம்சன், தன் சகோதரியின் மீது அளவு கடந்த பாசமுள்ளவன். அன்பின் காரணமாக, தானே தேரை ஓட்டிச் சென்றான். அப்பொழுது ஆகாயத் திலிருந்து ஒரு அசரீரி கேட்டது. ''கம்சா! அறிவில் லாதவனே! அளவு கடந்த பாசத்துடன் உன் தங்கையைத் தேரில் வைத்து மகிழ்ச்சியுடன் செல்கிறாயே, அவ ளுடைய எட்டாவது பிள்ளை உன்னைக் கொல்லப் போகிறான்'' என்றது.



இதைக் கேட்ட கம்சன் தேரிலிருந்து கீழே குதித்து, இடுப்பிலிருந்த கத்தியை உருவி, தேவகியின் கூந்தலைப் பிடித்து இழுத்துத் தள்ளி அவளைக் கொல்ல முற்பட்டான். அருகிலிருந்த வசுதேவன், மைத்துனனான கம்சனை சமாதானப்படுத்தினான். அதைக் கம்சன் பொருட்படுத்தாமல் தேவகியைக் கொல்ல முற்பட்டான். வசு தேவரும், ''நீ இந்த அபலையைக் கொல்ல வேண்டாம்; இவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளை உன் இஷ்டப்படி செய்துகொள்'' என்றார். அதற்கு இசைந்து கம்சன், ''அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக்கொண்டு, தேவகியைக் கொல்லாமல் விட்டான்.

வசுதேவரும் கம்சனுக்குக் கொடுத்த வாக்கின் படி, தேவகிக்குப் பிறந்த குழந்தைகள் ஒவ்வொன்றையும் கம்சன் வசம் ஒப்படைத்தான். கம்சனும் அக்குழந்தைகளைத் தானே கொன்று, வெற்றி மமதையுடன் மகிழ்ந்திருந்தான். திருமாலின் சொல்படி மாயையும், பாதாளத்தில் இருக்கிற இரண்யகசிபுவின் குமாரர்கள் அறுவரையும், தேவகியின் கர்ப்பத்தில் சேர்த்ததில் கம்சனும், தேவகியின் ஆறு குழந்தைகளையும் கொன்று வெறி தீர்த்தான். தேவகியின் ஏழாவது கர்ப்பம், மாயையினால் ரோகிணியின் வயிற்றில் சேர்ந்து, திருமாலின் அம்சமாக இருக்கும் ஆதிசேஷன், பலராமனாகப் பிறந்தான்.

எட்டாவது கர்ப்பம் தேவகிக்கு என்றவுடன் பலத்த பாதுகாப்புகளுடன் எதிர் நோக்கி இருந்தான் கம்சன். நந்தகோபனுடைய மனைவி யசோதையும் நிறைமாத கர்ப்பிணி; பிள்ளைச் செல்வம் இல்லாதவள்.

பிரம்மாதி தேவர்கள், கந்தர்வர்கள், நாரதர் முதலிய முனிவர்கள், தேவகியின் கர்ப்பத்தில் அமைந்திருக்கும் பரம புருஷனை மறைச்சொற்களால் வாழ்த்தி வணங்கினார்கள்.

கர்மத்தினால் விளையும் பிறவியற்ற பகவான் பிறக்க வேண்டும் எனக்கருதினார்கள். அதுசமயம் ரோகிணி நட்சத்திரத்திற்கு, மற்ற நட்சத்திரங்கள், சூரியன் போன்ற கிரகங்களும் அனுகூலமாயிருந்தன. திசைகள் தெளிந்து, வானில் தாரகைகள் அமைதியாயிருந்தன. பூமி முழுவதும் மங்கலங்கள் நிறைந்திருந்தன. காற்று நறுமணத்துடன் மெல்ல வீசிற்று. இந்த சமயத்தில் பகவான் திருமால் பூமியில் அவதாரம் செய்தார். அப்பொழுது வானில் துந்துபி வாத்தியங்கள் முழங்கின. சித்த சாரணர்கள் துதித்தனர். அப்ஸரஸ்கள் நர்த்தனம் செய்தார்கள். முனிவர்களும் தேவதைகளும் பூமழை பொழிந்தார்கள். மேகங்கள் மெல்லமெல்ல கர்ஜித்தன. கிழக்கு திசையில் முழுமதி உதித்ததுபோல், இந்த சமயத்தில் தேவகியிடம் திருமால் தோன்றினார்.

செந்தாமரைக்கண்கள், நான்கு திருக்கரங்களிலும் சங்கு சக்கரம், கதைமுதலிய ஆயுதங்கள், திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளம், தலையில் வைடூர்யம் இழைத்த கிரீடம், கழுத்தில் கௌஸ்துப மணி, நீலமேகம் போன்ற ஆபரணங்கள் அணிந்த அற்புதமான உருவ முடைய குழந்தையாகத் தோன்றுகின்ற திருமாலை வசுதேவர்கண்டார். பகவானே தனக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் கொண் டார். ஆனால் அடுத்த வினாடியே, கம்சனை நினைத்தவர் கதிகலங்கி, கடவுளான உருவத்தை மறைத்துக் கொள் ளும்படி பகவானை வேண்டினார். பகவானும், தேவகி யைப் பார்த்து, ''தாயே! இதற்கு முன் மூன்றாவது பிறவியில், ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில், நீ 'ப்ருச்னி' எனும் பெயருடைய பெண்ணாகவும், உன் கணவராகிய இந்த வசுதேவர் 'ஸுதபஸ்' என்னும் பெயருடையவராய் இருந்தார். உங்கள் இருவரையும் பிரம்மா, மக்களைப் படைக்கும்படி சொன்னதில், புலனடக்கத்தால், தவம் செய்ததில், மகிழ்ந்த நான் இதேபோல் தரிசனம் தந்து வேண்டும் வரம் கேட்கச் சொன்னதில் வீடு பேற்றை விரும்பாமல், என்னை மகனாகப் பிறக்க விரும்பினீர் கள். அந்தப் பிறவியில் உங்களுக்குப் புதல்வனாகப் பிறந்து, 'ப்ருச்னிகர்ப்பன்' எனப்பெயர்பெற்றேன். அதற்கு அடுத்த பிறவியில் 'காசிபர்' அதிதி என பெயர் பெற்ற உங்களிடம் வாமனன் என்ற பெயரில் புதல்வனாகத் தோன்றினேன். இப்பிறவியில் வசுதேவர், தேவகியாகப் பிறந்திருக்கிறீர்கள். இந்த மூன்றாம் பிறவியில் நானே பிள்ளையாகப் பிறந்திருக்கிறேன் என்பதைக் காண் பிக்கவே இந்த உருவத்தில் தோன்றினேன். எப்பொழுதும் என்னைப் பிள்ளையாகவே நினைத்துக் கொண்டிருப் பினும், என்னிடத்திலுள்ள அன்பினால் பரப்பிரம்மம் என்று பாவித்து, நட்புடையவர்களாகிச் சிறப்புடைய தான வீடு பேற்றைப் பெறுவீர்கள்'' என்று கூறித் தன் மாயையினால் மனிதக் குழந்தையாக மாறினார்.

வட மதுராவில், காவலில் உள்ள தேவகிக்கு ஆவணிமாதம், அஷ்டமிதிதி, ரோகிணி நட்சத்திரத்தில், திருமால் அவதரித்தார். மாயையினால் அனைவரை யும் நித்திரையில் ஆழ்த்திவிட்டு, தானே குழந்தையாகப் பிறந்ததைக் காட்டி விட்டு வசுதேவரிடம், தன்னைக் கோகுலத்தில் விட்டுவிட்டு அங்கு யசோதைக்குப் பிறந் துள்ள பெண் குழந்தையை இங்கு எடுத்து வந்து விடவும் என்றார். அதன்படி சிறையில் இருந்த வசுதேவரின் கைவிலங்குகள் களைய, காவலர்கள் மயங்கியபடி இருக்க வசுதேவர் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு, மழையில் நனைந்த வண்ணம், யமுனை நதியைக் கடந்து சென்றார். அது சமயம் ஆதிசேஷன் எனும் நாகம் தன் படங்களைக் குடையாக்கி, குழந்தை மழை நீரில் நனையா மல் பார்த்துக் கொண்டு பின் சென்றான். வசுதேவர், கோகுலத்தில் நந்தகோபரிடம் குழந்தையைக் கொடுத்து விட்டு, அங்குப் பிறந்துள்ள பெண் குழந்தையை எடுத்து வந்தார். மறுபடியும் கைகளில் விலங்குகள் பூட்டி, திறந்த கதவுகள் மூடிய பின், குழந்தையின் அழுகுரல் கேட்டு, காவலர்கள் விழித்துக் கொண்டு, கம்சனிடம் செய்தியைச் சொல்ல ஓடினார்கள். கம்சனோ நிலைகுலைந்து, தறி கெட்டு ஓடிவந்தான். வந்தவன் குழந்தையைப் பார்த்து, பெண் என்று சற்று யோசித்தவன், அடுத்த வினாடி, அதையும் கொல்லத் துணிந்து, கால்களைப் பிடித்து ஓங்கினான். அப்பெண் குழந்தையான மாயை, ஆகாயத் தில் தாவி, ''அடே கம்சா! என் கால்களைப் பற்றியதில் தற்சமயம் தப்பினாய்! உன்னைக் கொல்லப் பிறந்தவன் கோகுலத்தில் வளர்கிறான்'', என்று கூறி மறைந்தது.

கோகுலத்தில் யசோதை கண் விழித்த போது, அருகில் உள்ள ஆண் குழந்தையைக் கண்டு பூரித்துப் போனாள். நந்தகோபரும், கோகுலத்து வாழ் ஆயர்குடி மக்களும் கூடி விழாக்கொண்டாடினார்கள். அங்குள்ள மகிழ்ச்சியின் ஆரவாரம் வடமதுரையில் எட்டியதாகக் கூறப்படுகிறது.

★★★

நாரத முனிவர், உலக நன்மைக்காக சத்ய லோகம் சென்று, பிரம்ம தேவரிடம், ''ஹே! பிதாவே! ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி விரத மகிமையும், மகத்துவத்தைப் பற்றி நான் அறிய விரும்புகிறேன். ஆகையால், தாங்கள் தயவு கூர்ந்து எனக்குச் சொல்ல வேண்டும்,'' என்று வணங்கி நின்றார்.

பிரம்மதேவரும், தன் குழந்தையாகிய நாரதரிடம் சொல்லத் தொடங்கினார்.

இவ்விரதம் கலியுகத்தில் ஜனங்களுக்கு நேரும் படியான எல்லா பாவங்களையும் பஸ்மமாக்கும்படி யானது. ஐயத்தையும், நன்மைகளையும் கொடுக்கும். 'கிருஷ்ண ஜயந்தி' என்று நினைத்த அளவில் ஏழு ஜென்மங்களில், தான் செய்த பாவங்கள் நாசமடையும். ஜயந்தி தினத்தில் விரதமேற்று, உபவாசம் இருந்து பூஜை செய்தவர்களின் மகா பாபங்களைப் போக்குவதன்றி, அஸ்வமேதமும், தீர்த்த ஸ்நாநங்களும் செய்த பலனும், ஆயிரம் காராம்பசுக்கள், ரத்தின கோடிகள், அஸ்வகஜ (குதிரை, யானை) தானங்கள் ஆயிரக்கணக்காகச் செய்த பலனும், அளவற்ற ஆபரணங்கள் குருக்ஷேத்திரத்தில் தானம் கொடுத்த பலனும், கோடி கன்னிகா தானப் பலனும் அடைவார்கள். குருவுக்காகவும், தன் எஜமான னுக்காகவும், அந்தணர்களின் பொருட்டாகவும் தியாகத் தில், தன் தேகத்தால் செய்ததொண்டுகளால் ஏற்படும் பலனும், ஆபத்திலிருப்பவர்களுடைய கஷ்டங்களை நீக்கிய புண்ணிய பலனும் அடைவார்கள். இவ்விரத நன்னாளே கோகுலாஷ்டமி என வழங்கப்படுகிறது.

சத்தியவான்களுக்குக் கிடைக்கும் புண்ணியமும், பௌர்ணமி, அமாவாசை, சங்கராந்தி தினங்களில்

பிதுர்தேவதைக்களை உத்தேசித்துச் செய்த புண்ணிய நதிகளின் நீராடல் பலன்களும், தர்ப்பணாதிகள் செய்த புண்ணியமும் கிடைக்கும். இவ்விரதம் எல்லாக் கோரிக்கைகளையும் கொடுக்கக்கூடியது ஆகையால், முகுந்தன் முன், பக்தியோடு மூன்றே முக்கால் நாழிகை யாவது பூஜித்து வழிபாடு செய்வார்களேயானால், அவர் களுடைய பாவங்களெல்லாம் விலகும்.

ஸ்ரீகிருஷ்ணாஷ்டமி அன்று, சாப்பிடுகிறவர்கள் மூவுலகங்களிலும் பாவங்களை அனுபவிப்பவர்களா வார்கள். அன்றி இவ்விரதம் ஏற்றுச் செய்யாதவன், பசுக் களைக் கொன்றவன், (கோஹத்தி) மனிதனைக் கொன்ற வன் (பிரம்மஹத்தி), பெண்களைக் கொன்றவன் (ஸ்த்ரீஹத்தி) இவர்களுக்கு உண்டாகும் பாவங்களை அடைவான். மூர்க்கத்தனம் உடையவன், 'கள்' குடிப்ப வன், மிகுந்த பாவங்களை அடைவதைப்போல் அடை வான், சுகம் என்பதையே அடையமாட்டான்.

'கோகுலாஷ்டமி' என்பதும் ஆவணி மாத கிருஷ்ணபட்ச அஷ்டமிக்கே பெயர் வழங்குகிறது. ஆவணி மாதம், அஷ்டமி திதி, ரோகிணி நட்சத்திரத்தில் இவ்விரதம் ஏற்று செய்தால், சதுர்புஜரான சக்ரபாணியி னுடைய பாதசேவையால் அளவற்ற பாவங் களி லிருந்து விலகி நற்கதி அடையச் செய்வார். இன்றைய தினத்தில் பகவானைப் பூஜித்த பேர்களுக்கு தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்கள் விலகிப் போகும். மேலும் தர்ம, அதர்ம, காம, மோக்ஷமென்னும் நான்கு வித புருஷார்த்தங்கள் கைகூடி வரும். சிவ விஷ்ணு பக்தர்களும், பெண்களும், ராஜாக்களும் ஜாதிமத பேத மின்றி அனுஷ்டித்து, பகவானுடைய அருளுக்குப் பாத்திர மாவதோடு, பாபங்கள் விலகி முடிவில் வைகுண்டப் பதவி அடைவார்கள் என்று பிரமதேவர் கூறினார்.

மேலும் நாரதர், பிரம்மதேவரிடம் விரதம் அனு சரிக்கும் முறையையும், விரதம் ஏற்றுச் செய்தவர் களின் பலன்களையும் கேட்டார். அதற்குப் பிரம்ம தேவரும் மனம் உவந்து விவரித்தார். அவர் கூறியதாவது.

''பூர்வத்தில் அரிச்சந்திரன், சனத்குமாரரிடம் பிரார்த்தித்து இவ்விரதம் செய்யும் முறையை அறிந்தார். விதிப்படி செய்யாத விரதங்களால் நன்மை உண்டாகாது. ஆகையால் பக்தியோடு இந்த விரத தினத்தில், சுத்த நீரில் நீராடி, வீட்டில் சுத்தமான இடத்தில் வண்ணக்கோலங் களிட்டு, மண்டபம் அமைத்து அலங்கரித்து, தலை வாழை இலையில் பச்சரிசியைக் கொட்டி, ஒரு புதிய கும்பம் வைத்து, புதிய ஆடை அணிவித்து, புஷ்பங் களால் அலங்கரித்து, அவரவர் சக்திக்குத் தக்கபடி, தங்கம், வெள்ளி, பஞ்சலோகங்களினால் ஆன கிருஷ்ண விக்கிரகத்தை வைத்து, அலங்கரித்துக் கிரமமாய் பூஜை செய்ய வேண்டும். ஆவாகனம் முதல் அர்ச்சனை நிவேதனம், பஜனை, பாட்டு, வாத்திய இசைகளுடன் இரவில் கண்விழித்து, மறுநாள் சுத்தமாக நீராடி, புனர் பூஜையை முடித்து அவ்விக்கிரகத்தை ஓர் அந்தணருக்குப் புது ஆடை, தாம்பூலாதிகளுடன் தானம் அளிக்க வேண்டும். இப்படிச் செய்வதால், இவ்வுலகில் புத்திரர் பௌத்திரர்களுடன், சகல நன்மைகளையும் அனுபவித்து முடிவில் ஸ்ரீமந்நாராயணனுடைய பாதாரவிந்தங்களில் சேருவார்கள்'' என்று சொன்னார்.

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி பண்டிகையை, பிருந்தா வனம், மதுரா, கோகுலம், துவாரகை, குருவாயூர், உடுப்பி, பூரிஜகந்நாத், பண்டரிபுரம் ஆகிய க்ஷேத்திரங் களில் மிகவும் விசேஷமாக, சிறப்பாக விண்ணும் மண்ணும் வியக்கும் வண்ணம் கொண்டாடுகிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியில் வழுக்கு மரம் ஏறுவதை யும், உறி அடித்திருநாளாக உறி அடிப்பதையும் மக்கள் விளையாட்டாகக் கொண்டு கொண்டாடுகிறார்கள்.

கண்ணன் பிறந்த நாளான இவ்விழா, வீடுகளில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகை யாகும். அன்றைய தினம், சுத்தமான இடத்தில், மாக் கோலங்களினால் கோலமிட்டு, கையில் வெண்ணை யுடன் தவழும் கண்ணன் படம் வைத்து, அலங்கரித்து, வாசல் முதல் சுவாமி உள்ள இடம் வரை சிறு பாதங்கள் வரைவது வழக்கம். அதற்குக் காரணம் உண்டு. கோகுலத்தில் கண்ணன் தோழர்களுடன் கோபியர் வீடுகளில் வெண்ணை திருடும்போது, தின்னும் அவசரத் தில் கீழே சிதறிய வெண்ணையில், கண்ணனின் மலர் பாதங்கள் பதிந்து வீடு முழுவதும் பாதம் தெரியும். அதனால் அந்தக்காலத்தில் ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடும் மக்கள், வெண்ணையினால் பாதங்கள் போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அந்தக் காரணத்தினாலேயே இந்நாளில் மாவினால் கோலம் போடுகிறார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் கண்ணன் பிறப்பதாகவே தோன்றும் வண்ணம் தோற்றமளிக்கும் படி இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதைக் காணலாம்.

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியை, கணவனும் மனைவியு மாகக் கொண்டாட வேண்டும்.

அன்றைய தினம் நிவேதனம் செய்வதில், அவல், வெண்ணை முக்கியமாக இடம் பெற வேண்டும். வெல் லச் சீடை, உப்புச் சீடை, முறுக்கு, அப்பம், வடை, பாயசம், வெண்பொங்கல், பால் தயிர், அவல், வெண்ணை, பழங்கள், தேங்காய், வெற்றிலை, பாக்கு எல்லாம் வைத்து சிறப்பாக பூஜிக்க வேண்டும்.

★★★

# கிருஷ்ணாவதாரத்தில் கட்டுண்ட ஆழ்வார்கள்

- திருமதி கோமதி ராகவன், FCA

சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு
ஆதியஞ்சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த
வேத முதல்வனைப்பாடி வீதிகள் தோறும் துள்ளாதார்
ஓதியுணர்ந்தவர் முன்னா என் சவிப்பார் மனிசரே?''

(நம்மாழ்வார் திருவாய்மொழி)

ஸாதுக்களாகிய ஸ்ரீவசுதேவரும் தேவகியும் நலிந்து சிறையில் இருந்தது ஸ்ரீமந் நாராயணன் ''பரித்ராணாய சாதூனாம் விநாஷாய சதுஷ்க்ரிதாம்'' அதாவது சாதுக்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களை சம்ஹாரம் செய்யவும் அவதாரம் செய்கிறார் என்று கிதையில் கூறிய வாறு தன்னுடைய ஆதியஞ்சோதி உருவை அங்கு அதாவது ஸ்ரீவைகுண்டத்தில் இருந்தபடியே வைத்துக் கொண்டு இங்கே வந்து தோன்றியது கம்ஸனை அடக்கு வதற்காக; இவ்வாறாக நம்மாழ்வார் கண்ணன் அவதாரத் தைப்பற்றிக் குறிப்பிடுகிறார். இதனை ஈடு வ்யாக்யானத் தில் ''நித்ய ஸூரிகள் அநுபவிக்கிறபடியே லீலா விபூதியில் உள்ளாரும் அநுபவிக்கும்படி திருமேனி கொண்டு அவதரித்தார்'' என்று கூறுவர் பிள்ளைலோகா சார்யர். இவ்விருள் தருமா ஞாலத்தே அடியவர் தம்மை ரக்ஷிப்பதற்காக கிருஷ்ணாவதாரம் பூண்டு ''மாமேகம் சரணம் வ்ரஜஸர்வ பாபேப்யோ மோக்ஷயின் யாமி'' அதாவது ''நீயே எனக்கு உபாயம்'' என்று வேண்டி னோர்க்கு பகவானே தோஷங்களை நீக்கி அங்கீகரிக் கிறார் என்றவாறு தாமே உபாயமாக நின்று கிதையின் மூலமாக ஆசார்யன் தொழில் ஏற்று ''அறியாதன அறி வித்து'' மனிதரைத் திருத்திப் பணி கொண்டார் என்று மொழிவர். பிள்ளை லோகாசார்யர் கூறும் இவ்வுபாய வைபவமே கிருஷ்ணாவதாரத்தின் ஸாரம் என்னலாம்.

இவ்வாறாக அவதரித்த ''ஆர்த்த புகழ் அச்சுதனை'' அதாவது குறைவற்ற கல்யாண குணங்களை யுடையவனும் சகுணப்பிரம்மமாக இருப்பவனும், தன்னை ஆச்ரயித்தவரைக் காப்பவனுமாகிய கிருஷ் ணனை ஆழ்வார்கள் ''ஆடியாடி அகங்கரைந்து இசை பாடிப்பாடி'' மகிழ்கின்றனர்.

கண்ணன் பிறந்தவுடன் ஆயர்கள் எவ்வாறு குதூகலித்தனர் என்று பெரியாழ்வார் கூறுகிறார்.

ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே.

கண்ணனின் திருமேனி அழகை இவ்வாறு வர்ணிக்கிறார்:

சீதக்கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே! பவள வாயீர் வந்து காணீரே!


பெரியாழ்வார் மாயக்கண்ணனின் அழகில் ஆழ்ந்து பின் தாலாட்டுப்பாடல், அம்புலிப்பருவம், தளர் நடை பருவம், கோல் கொண்டுவர விளம்புதல் போன்ற பிள்ளைத்தமிழ் பாடல்களைப் பாடியுள்ளார். ''பெரியாழ் வார் திருமொழி'' பெரும்பாலும் கிருஷ்ணாவதாரம் பற்றியதே. ''பிள்ளைத்தமிழ்'' என்னும் தமிழ் இலக்கிய வகை நூல்களுக்கு ''பெரியாழ்வார்திரு மொழிப்'' பாடல் கள் முன்னோடியாகத் திகழ்ந்தன என்று இலக்கிய வல்லுனர் கூறுவர்.

குலசேகராழ்வார் இயற்றிய பெருமாள் திருமொழி யில் நூற்றிஐந்து பாசுரங்கள் உள்ளன. அவற்றில் இருபது பாசுரங்கள் கண்ணன் அவதாரம் பற்றி எழுதப்பட் டவை. குலசேகராழ்வார், இராமாவதாரத்திலேயே மிக வும் ஈர்க்கப்பட்டவர்.

கண்ணன் திருவிளையாடல்களைத் தான் அனுப விக்கவில்லை; அப்பாக்யம் நந்தகோபன் பத்தினியான யசோதைக்கே கிடைத்தது என்பது பற்றி ஆழ்வார் தன்னை தேவகியாகப் பாவித்து இவ்வாறு கூறுகிறார்.

முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்
முகிழ் இளஞ்சிறு தாமரைக்கையும்
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு
எள்குநிலையும் வெண தயிர் தோய்ந்த
செவ்வாயும்
அழுகையும் அஞ்சிநோக்கும் அந்நோக்கும் அணிகொள்
செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையும் இவை கண்ட அசோதை தொல்லை
இன்பத்து இறுதி கண்டாளே.





மேலும் ''ஸ்ரீமுகுந்தமாலை'' என்கின்ற நாற்பது சுலோகங்கள் கொண்ட நூலினையும் இவர் வடமொழியில் இயற்றியுள்ளார். அதில், நரகாசுரனை அழித்தவரும் தாமரைக்கண்ணனுமாகிய கண்ணனைத் தன் இதயமாகிய கோயிலில் ஒவ்வொரு பிறவியிலும் நினைக்கவேண்டும் என்பதற்காகவே தான் கண்ணனைத்துதிப்பதாகக் கூறுகிறார். நம்முள் அந்தர்யாமியாக உள்ள ஜோதிமய மானவன் கண்ணன்தான் என்று கூறுகிறார்.

திருமழிசையாழ்வார் அருளிய நூற்றியிருபது பாசுரங்கள்'' திருச்சந்த விருத்தம்'' என்று அழைக்கப் படுகின்றன. இதில் காளிங்க நர்த்தனம் பற்றி ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

கடங்கலந்தவன்கரி மருப்பொசித்ததோர் பொய்கைவாய்
விடங்கலந்த பாம்பின்மேல் நடம் பயின்ற நாதனே
குடங்கலந்த கூத்தனாய கொண்டல் வண்ண தண்டுழாய்
வடங் கலந்த மாலைமார்ப காலநேமி காலனே.

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதியை இவ்வாறு மங்களாசாசனம் செய்கிறார்.

பார்மிகுத்தபாரமுன் ஒழிச்சுவானருச்சுனன்
தேர் மிகுத்து மாயமாக்கி நின்று கொன்று வென்றிசேர்
மாரதர்க்கு வான் கொடுத்து வையம் ஐவர் பாலதாம்
சீர் மிகுத்த நின்னலால் ஓர் தெய்வம் நான்மதிப்பனே?

மேலும் இவர் இயற்றிய ''நான்முகன் திருவந்தாதி'' யிலும் கண்ணனைப் போற்றி பாடல்கள் பாடியுள்ளார்.

தொண்டரடிப் பொடியாழ்வார் கன்றுகள் மேய்த்த கண்ணன் அல்லால் வேறு தெய்வம் இல்லை, அவன் கழலிணைப்பற்ற வேண்டும் என்று கூறுகிறார்.

மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலா மானிடங்காள்
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று
உணரமாட்டீர்
அற்றமேல் ஒன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே.

திருப்பாணாழ்வார் அரங்கனைப் பண் இசைத்துப்பாடி தொண்டு புரிந்து வந்தவர். வெண்ணெய் உண்டவனாகிய கண்ணனே திருவரங்கன் என்றும் அவனைக் கண்ட கண்கள் மற்றொன்றை நோக்கா என்றும் குறிப்பிடுகிறார்.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

பொய்கையாழ்வார் கண்ணன் உரலொடு கட்டுண்ட பெருமையை இவ்வாறு விளக்குகிறார்.

''விர லோடு வாய் தோய்ந்த வெண்ணெய்
கண்டு ஆய்ச்சி
உரலோடுறப் பிணித்த ஞான்று - குரலோவா
தேங்கி நினைந்து அயலார் காண இருந்திலையே?
ஓங்கோத வண்ணா வரை.''

இதனையே நம்மாழ்வார் ''அமரர்க்கரியானை தமர்கட்கு எளியானை'' என்றும் ''பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்'' என்றும் திருவாய்மொழியில் குறிப்பிடுகிறார். திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் ''கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் ஆகிலும் எண்ணற்கரியன் இமையோர்க்கும் சாழலே'' என்றார். உரலோடு கட்டுண்டதும் முன்பு திரிவிக்கிரமனாக அவதரித்த கண்ணனின் திருவிளையாடலே என்றவாறு.

பூதத்தாழ்வார் தம் மனத்தில் இருப்பவனும், வேங்கடத்தில் இருப்பவனும், திருப்பாற்கடலில் இருப்பவனும், திருவரங்கத்தில் இருப்பவனும் தேவாதி தேவனாகிய கண்ணனே என்று கூறுகிறார்.

''மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் மற்றும்
நினைப்பரிய நீள் அரங்கத்துள்ளான் எனைப்பலரும்
தேவாதி தேவன் எனப்படுவான் முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன்.''

பேயாழ்வார் கண்ணனே ஸ்ரீநரசிம்மராகவும் வாமனராகவும், இராமபிரானாகவும், ஸ்ரீவராகராகவும் அவதரித்தான் என்பார். இவரும் கண்ணன் கட்டுண்ட தன்மையை விளக்குகிறார்.

''மண உண்டும் பேய்ச்சி முலை உண்டும் ஆற்றாதாய்
வெண்ணெய் விழுங்க வெகுண்டு ஆய்ச்சி கண்ணிக்
கயிற்றினால் கட்டத் தான் கட்டுண்டிருந்தான்
வயிற்றினோடு ஆற்றா மகன்.''

மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரைப் பற்றி பதினொன்று பாடல்கள் கொண்ட பதிகம் பாடினர். ஒருவரைப் புகழ்ந்து பேசவிழையுங்கால் மிகச்சிறந்த மற்றொருவரைக் காட்டிலும் இவர் சிறந்தவர் என்று கூறுவதுதானே இயல்பு. இதனால் ஒருவரது புகழ் நேரிடையாகவும் மற்றொருவரது புகழ் தொக்கி நிற்பதாகவும் இருப்பினும் இரண்டுமே வானோங்கிய புகழாக விளங்குவதைக் காணலாம்.

மற்ற அவதாரங்களையெல்லாம் விடுத்து ஆழ்வார் சிறிய கயிற்றினால் அசோதைபால் தாமே கட்டுண்ட அவதாரமாகிய கிருஷ்ணாவதாரத்தின் சிறப்பினை நினைவு கூர்கிறார். அத்தனை சிறப்புமிக்க கண்ணனைக் காட்டிலும் நம்மாழ்வாரே தமக்கு உகந்தவர் என்கிறார்.

''கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென் குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என்நாவுக்கே.''

திருமங்கையாழ்வார் ஆயிரத்து நூற்றித்தொன்னூற்று நான்கு பாசுரங்களை ஆறு நூல்களாக அருளிச் செய்தார். இவற்றில் தான் கண்ணன் பால் கொண்ட மையலை ''நாயக - நாயகி'' பாவம் கொண்டு தன்னைப் பரகால நாயகியாக பாவித்து தமது ஆற்றாமையையும் பின் மடல் ஊறுதலையும் பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல் மூலமாகத் தெரிவிக்கிறார்.

வாராயோ? என்றார்க்குச் சென்றேன் என்
வல்வினையால்
காரார் மணிநிறமும் கைவளையும் காணேன் நான்

என்று சிறிய திருமடலிலும்

வாய் எடுத்த மந்திரத்தால் அந்தணர்தம் செய்
தொழில்கள்
தீ எடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ண புரத்துறையும்
தாய் எடுத்த சிறு கோலுக்கு உளைந்து ஓடி தயிர் உண்ட
வாய் துடைத்த மைந்தனுக்கு இழந்தேன்
என் வரிவளையே

என்று பெரிய திருமொழியிலும் விவரிக்கிறார்.

கையிலும் வாயிலும் வெண்ணெய் இருந்தால் பிடிபடுவோம் என நினைத்து வெண்ணெயை உடம்பிலே தடவிக்கொண்டு ''இனி நாம் அஞ்ச வேண்டியதில்லை'' என்று தன் பேதமையை அன்று வெளிப்படுத்தி தம் கனவு வெளிப்பட நின்றவன் பால் ''மேல் விளைவது என்ன என்று அறியாது மையல் கொண்டேன். இன்று என் வளைகள் இழந்து பிரிவாற்றாமையால் படர் மெலிந்திரங்குகிறேன்'' என்றார்.

நம்மாழ்வார் நான்கு வேதங்களின் சாரமாக நான்கு நூல்களை அருளிச் செய்தார். இவை ஆயிரத்தி இருநூற்றி தொன்னூற்று ஆறு பாசுரங்கள் கொண்டவை. ஆழ்வார் தன்னைப் பராங்குச நாயகியாக பாவித்துத் தனக்கு ''உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'' என்கிறார். ''யோமாம் பஷ்யதி சர்வத்ர சர்வம் ச மிய பஷ்யதி'' அதாவது ''எவன் எதிலும் என்னையே காண்கிறானோ, எதையும் என்னிடத்தில் காண்கிறானோ அவனிடத்தில் நான் எல்லையற்ற ப்ரேமையுடன் அனுக்ரஹஞ் செய்கிறேன்'' (ஸ்ரீமத் பகவத்கீதை) என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறியவாறு.

நாயகி, இளம் கன்றுகளைப் பிடித்து அவை போகாது ஒழியுமாறு நின்று இவை கோவிந்தன் மேய்த்தவையாகையால் இவற்றின் அருகே நின்றால் கண்ணன் வந்துவிடுவான் என்றிருக்கிறாள். இதனை உணர்ந்த நாயகியின் தாய் செய்வதறியாது திகைக்கிறாள்.





கோமள வான் கன்றைப் புல்கிக் கோவிந்தன் மேய்த்தன என்னும்
போமிள நாகத்தின் பின்போய் அவன் கிடக்கையீதென்னும்
ஆமள வொன்றுமறியேன் அருவினையாட்டியேன் பெற்ற
கோமளவல்லியை மாயோன் மால் செய்து செய்கின்ற கூத்தே.

இவ்வாறு மாயோன் என் மகளை ஆற்றாமையில் ஆழ்த்துகிறான் என்றவாறு.

பராங்குசநாயகி தன்னையே கண்ணனாக பாவித்து எம்பெருமானே தம்மேல் ஆவேசித்து வந்து விட்டானோ என்று பிறர் நினைக்குமாறு இவ்வாறு கூறுகிறாள்.

''காண்கின்ற நிலம் எல்லாம் யானே என்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்
காண்கின்ற வெந்தீ யெல்லாம் யானே என்னும்
காண்கின்ற இக்காற்றெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே என்னும்
காண்கின்ற என்காரிகை செய்கின்றனவே
காண்கின்ற கடல்வண்ணன் ஏறக்கொலோ
காண்கின்ற உலகத்தீர்க்கு என்சொல்லுகேன்''

இப்பாசுரத்தால் கண்ணனே இப் ப்ரபஞ்சங்களில் விளங்குகிறான் என்கிறார் நம்மாழ்வார். ஈசாவாஸ்யோ உபநிடதத்தில் ''ஈசா வாய்யம் இதம் சர்வம்'' என்றபடி.

''இராமாயணத்தில் சிறை இருந்தவள் ஏற்றமும் மகாபாரதத்தில் தூது போனவன் ஏற்றமும் சொல்லப் படுகிறது'' என்கிறார் பிள்ளைலோகாச்சார்யர். இராமாயணத்தால் புருஷாகார வைபவம் விளங்கிற்று. அதாவது பிராட்டியார் கிருபை, பாரதந்திரியம் மற்றும் பெருமாளைத் தவிர வேறொரு விஷயத்திற்கு சேஷப் படாமல் இருப்பது. கற்பின் தன்மையை திருவள்ளவர்

தெய்வம் தொழா அள் கொழுநற்றொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' என்றார்.

இவ்வாறே ''பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னானாள்'' ஆகிய ஸ்ரீஆண்டாளும் ''நாச்சியார் திருமொழியில்'' ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்றும் ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் கண்ணனுக்கே உற்றேன் ஆவேன்'' என்றும் அவனுக்கே ஆட் செய்வேன் என்றும் மற்றை காமங்கள் அவளுக்கு இல்லை என்றும் புருஷாகார வைபவத்தை விளக்கினாள்.

கண்ணன் பால் மையல்கொண்ட ''பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை' யானவள்

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய் தான் தித்திதிருக்குமோ''
என்றாள். தான் விரும்பியவாறே கண்ணனையே மணந்தாள்.

வாய் நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சினமாக்களிறு அன்னான் என்கைப்பற்றி
தீவலாம் செய்யக் கனாகண்டேன் தோழி நான்

(நாச்சியார் திருமொழி - வாரண மாயிரம்)

இவ்வாறு கிருஷ்ணாவதாரத்தின் மேன்மையைப் பாடிப் பரவசம் கொண்டனர் நம் ஆழ்வார்கள்.

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

***6. கடி மணம் காணக் கதிரோன் வந்தான்***

ஜனகர் ஒரு ராஜரிஷி, எப்போதும் அவர் அரண மனையில் வேள்வி நடந்து கொண்டேயிருக்கும். கரண்டி போன்ற ஒரு பாத்திரத்தில் நெய்யை எடுத்து வேள்வித் தீயில் விட, தீயின் சுவாலை அப்பாத்திரத்தை நோக்கிப் பாய்ந்து வரும். விசுவாமித்திரர் இராமபிரானை உற்று நோக்கிய போது நெய்யைக் கண்டு தாவும் சுவாலை போல திடீரென இராமபிரான் எழுந்தான். அத்தகைய விரைவு கண்டு ''வில்லை இராமபிரான் வளைத்து விடுவான்'' என அனைவரும் எண்ணினர். ''திருமணம் செய்து கொள்ள இசைந்தால் பெண்ணை அளிப்பதை விட்டு, உலகையழிக்க வந்த கங்கையைத் தலையில் தாங்கிய பலசாலியான சிவபெருமானது வில்லை யெடுத்து, இவ்விளைஞர் முன் இட்டது தவறு'' என் றெல்லாம் மக்கள் பேசிக் கொண்டனர். விரைவில் எழுந்து வந்த இராமபிரான் சீதாபிராட்டியின் திருக் கழுத்தில் அணிவிக்கக் கூடிய மணமாலையை எடுப்பது போல் வில்லை வெகுவிரைவில் எடுத்தார். அவ்வளவே! வில் ஒடிந்த ஓசை விண் பிளக்கக் கேட்டது. இத்தகைய விரைவான செயலை **எடுத்தது கண்டனர் இற்றது கேட் டார்** என்கிறது கம்பனின் மந்திரக் கவிதை, இராமபிரான் வில் முறித்ததுகண்டு, ''ஒரு மனிதப் பெண்ணை இராம பிரான் திருமணம் செய்து கொள்ளப் போகிறான். மனித சாதியின் பாக்யமே பாக்யம்'' என எண்ணி தேவருலகப் பெண்கள் கீழிறங்கி மனித சாதிப் பெண்களை அணைத் துக் கொண்டனர். விண்ணும் மண்ணும் தழுவின. மக்கள் மகிழ்ச்சி அளவிட முடியாதாயிற்று. விசுவாமித்திரரிடம், சனகர் ''பெருமானே! சீதாராமர் திருமணத்தை இப்போதே நடத்தி விடலாமா? அல்லது தசரதரையும் வரவழைத்துக் கொண்டபின் செய்யலாமா?'' எனக் கேட்டார். ''**தந்தை நீ தனித்தாயும் நீ**'' எனக் கூறி, தசரதர் இராமபிரானை விசுவாமித்திரருடன் அனுப்பினார். எனவே தாங்களே தந்தையின் பொறுப்பிலிருந்து திருமணத்தை நடத்திக் கொள்ளலாமா என ஜனகர் கேட்டதாகக் குறிப்பு. தசரதரும் வரவேணுமென விசுவாமித்திரர் கூற ஜனகர் தசரதருக்குத் திருமண ஓலையனுப்பினார். தசரதரும் அயோத்தி மக்களும் மிதிலை நோக்கி வந்தனர்.

சீதாராமர்களின் திருமணத்திற்கு அயோத்தி மக்கள் வந்த நிகழ்ச்சிகளை சுமார் முந்நூறு பாடல்களில் பல அழகிய இன்பகரமான கருத்துக்களுடன் பாடி யருளினார் கவிச் சக்கரவர்த்தி.

1. திருமணத்திற்குச் செல்லும் சிலர் ஒட்டகத்தில் ஏறி வருகின்றனர். மாவிலை மற்ற சுவையுள்ள இலை களிருக்க ஒட்டகங்கள் வேப்பமரத்தின் இலைகளை உண்டன. பால் தயிர் முதலான சுவையுள்ளவற்றை விட்டுக் கள்ளையருந்தி வாழும் அறியாத மக்களைப் போல - **கள்ளுண் மாந்தரில் கைப்பன தேடியே** என மது வருந்தும் கொடுமையைக் கூறிக் காட்டினார்.

2. யானையொன்று பூமியில் விழுந்து எழுந்து வந்தது. அதனுடைய கரிய நிறம் ஒரு புறமிருக்க, மற் றொரு புறம் கீழே விழுந்து வெண்மையாயிருக்க ஒரு புறம் திருமாலைக் கொண்ட சங்கரநாராயணன் போல விளங்கியது அந்த யானை. **கண்ணுதல் பொருந்த வரு கண்ணனைப்** போல காட்சியளிக்கிறது என்கிறார். திரு மால், சிவன் என்ற பேதமற்ற நிலையாகக் காட்டினார்.

3. இருட்டைப் பிளந்து தனது பொன்னிறக் கதிர் களைப் பரப்பிக் கொண்டு தோன்றும் சூரியன், தூணைப் பிளந்து கொண்டு இரணியனை அழிக்கத் தோன்றிய நரசிம்ம மூர்த்தி மாதிரி உதயமானார் எனத் தன் குல தெய்வமான (கம்பத்தினின்றும் தோன்றிய கடவுளான கம்பனை) நரசிம்ம மூர்த்தியை நினைவு கொள்கிறார். கம்பரின் இந்த பாரகாவியத்திலேயே இரணியன் வதைப் படலம் என்ற தலைப்பில் பின்னால் நரசிம்மாவதாரத் தையும் கண்டு களிக்கப்போகிறோம்.

மீனுடை எயிற்றுக் கங்குல் கனகனை வெகுண்டு: வெய்ய
கானுடைக் கதிர்கள் என்னும் ஆயிரம் கரங்கள் ஓச்சித்
தானுடை உதயமென்னும் தமனியத் தறியுள்நின்று
மானுடமடங்கலென்னத் தோன்றினன்
வயங்குவெய்யோன்.

மிதிலை நோக்கிச் சென்ற மக்கள் இரவில் காட் டில் ஒரு இடத்தில் தங்கினர். மறு நாட்பொழுது விடிந்தபோது காலைக் காட்சியைக் கவிஞர் நரசிம்ம வதாரக் காட்சியாகக் காட்டியருளினார்.

4. தங்கிய இடத்தில் காட்டிலுள்ள கிளி, குயில் முதலிய பறவைகளின் சத்தம் கூட இல்லாமல் அமைதி நிரம்பியிருந்தது. அயோத்தி மகளிரின் இனிமையான பேச்சுக்குரல் கேட்ட பறவைகள் தமது குரல்களின் இனிமை தோற்றுவிடும் என அஞ்சிப் பேசாமலிருந்தன. படித்த பெரியோர்களிருக்குமிடத்தில் பேச முடியாது



அடங்கியிருக்கும் படியாதவர்கள் போல என்கிறார் கவிஞர். கூசின அல்ல பேச நாணின குயில்கள் எல்லாம் - வாசகம் வல்லார் முன்னின்று யாவர் வாய் திறக்க வல்லார் என்கிறார். மூன்றே நாள் தமிழ்படித்து முடித்த வுடன் முழுப்புலமை வந்ததாக - ஆன்ற நெடும் செருக் கோடு ஆயுள் வரை படித்தவரை அவங்கள் பேசும் சில அன் பர்களுக்கு அறிவுரை கூறுவது போல் அமைந் துள்ளது இப்பாடலின் கருத்து.

5. ஒரு பெண் தேன் நிறைந்த பாத்திரத்தை கையில் வைத்து மூடிக் கொண்டிருக்கிறாள். தேன் உண்ண அந்தப் பெண்ணின் நாவு துடிக்கிறது. கையை எடுத்து விட்டால் தேனில் வண்டு விழுந்து தேன் பூராவும் வீணாகி விடும். எனவே அந்தப் பெண், பக்கத்தில் படர்ந்து ஓடிக் கொண்டிருந்த குழல் வடிவான ஒரு கொடியைக் கொய்து தேனுக்குள் வைத்து உறிஞ்சிக் குடித்தாள் ஊன்றிய கழுநீர் நாளத்தாளினால் ஒருத்தி உண்டாள் என்கிறார். தற்காலத்து அன்பர்கள் குளிர்பானங் களைக் குடிக்க ஒரு குழலை (Straw) வைத்து உறிஞ்சிக் குடிக்கின்றனர். இது புதிய நாகரீகமல்ல. தமிழரின் பழைய நாகரிகம். நம்மவர் சூடான நீர் மற்றும் பானங் களை வெப்பம் மாறாதிருக்க Thermos Flask என்று ஒரு குப்பியை உபயோகிக்கின்றனர். மூங்கில் குழாய்களை ஒன்றுக்குள் ஒன்றை வைத்து, அதற்குள் வைத்த வெப்பம் அல்லது குளிர்ந்த நீர் அதே சீதோஷ்ண நிலையிலிருக்க நம் தமிழர் சேமச் செப்பு என்ற ஒரு குப்பியை வைத்திருந்தனர் எனக் குறுந்தொகை கூறுகின்றது. மேனாட்டு நாகரிக மோகத் தில் மூழ்கியுள்ள நம்மவர் நம் தமிழ் நாட்டு நாகரிகம் மிகப் பழமையானது என உணர்ந்து மகிழலாம்.

6. கம்பரின் முன்னோடியான வள்ளுவர் தமது குறள் நூலின் காமத்துப்பாலில் ''எனது கணவர் என் நெஞ்சிலுள்ளார். சூடான எதை உண்டாலும் அவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். எனவே சூடான எதை யும் உண்ணமாட்டேன்'' என்று ஒரு பெண் கூறியதாகக் கூறியருளினார்.

நெஞ்சத்தால் காதலர் அவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து - 1128

மங்கையர் சில மதுவருந்தி மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடும்போது ஒரு பெண், ''என் கணவர் என் நெஞ்சி லுள்ளார். அவர் மதுவருந்த மாட்டார். எனவே நானும் உண்ணமாட்டேன்'' எனக் கூறுவதாக கம்பர் பெருமான் 'உள்ளுறை அன்பன் உண்ணான் என நறவு உண்ணல் எண்ணாள்'' எனக் கூறியருளினார்.

இவ்வாறு பல இன்பகரமான நிகழ்ச்சிகளுடன் அயோத்தி மக்கள் மிதிலாபுரியடைந்தனர். விசுவாமித்தி ரரின் பின்னால் இராமபிரான் சென்ற போது தசரதரின் உயிர் விசுவாமித்திரர் பின்னரே சென்றது போலிருந்தது

மன்னன் **இன்னுயிர் வழிக் கொண்டாலென** எனக் கூறிய கவிஞர் உயிரற்ற உடல் திருமணத்திற்கு வரக்கூடாது, ஊருக்கு வெளியில் ஜனகர்தசரதரைஎதிர்கொண்டழைத்த போது இராமபிரான் தோன்றி தசரதரை வணங்கினார் எனக் கூற வந்தவர் **ஆவிவந்தென்ன வந்து அரசன் மாடணுகினான்** எனக் கூறி தயரதனுடைய உயிர் தயரத னிடமே வந்து விட்டது என மங்கலமாக மாற்றியருளி னார்! என்னே நம் கவிஞரின் நினைவாற்றல்!

மனிதர்களின் உருப்பிலக்கணம் தெரிந்த கம்பன், இராமபிரானின் திரு அழகைக் கண்ட மக்கள் தோள், மார்பு, வயிறு, கை, கால் என்று வரிசையாகக் காணாது, தோள், தாள், தடக்கை இவற்றைக் கண்டனர் எனக் கூறினார். ஏன்?

ஐயாயிரவர் எடுத்து வந்த வில்லை வளைத்த **தோள்கண்டார் தோளே கண்டார்.** கல்லுருவாயிருந்த அகலிகைக்கு முன்னுருக் கொடுத்த **தாள் கண்டார் தாளே கண்டார்.** கொடிய அரக்கியான தாடகையை யழித்த **தடக்கை** கண்டவரும் அவ்வாறே ஆயினர். இராமபிரானது முழு அழகையும் எவரும் காண முடிய வில்லை. ஊழிக்காலத்தில் தோன்றிய இறைவனின் திருவுருவை எவரும் முழுமையாகக் காண முடிய வில்லை. அம்மாதிரி மிதிலாபுரி மக்கள் இராமபிரானின் முழுவுருவத்தையும் காண இயலவில்லை எனக் குறித் தார் கவிச்சக்கரவர்த்தி.

உலா வந்த இராமபிரான் ஜனகரின் அரண்மனை யையடைந்தார். மணமகளான சீதா பிராட்டிக்கு அழகு செய்தனர் என்கிறார் கம்பர். கண் இமைகள் மூடிக் கொண்டு கண்களை மறைக்கின்றன. ஆனால் இமைகள் இல்லாத முகத்திற்கு அழகே இல்லை. அழகு செய்து கொண்டால் தான் சிலர் காண்பதற்கு அழகாயிருப்பார். ஆனால் சீதாபிராட்டிக்கு அநேக ஆபரணங்களை அணிவித்ததால் அப்பெருமாட்டியினது அழகுக்குத் திரை யிட்டு மறைப்பது போலிருந்தது. அமுதத்திற்கு மேலும் இனிப்பைச் சேர்க்க முடியுமா? சீதாபிராட்டிக்கு அழகு செய்வது என்பது அறியாமை; யார்தான் அழகிற்கு அழகு செய்வார் என்கிறார் கம்பர்.

சீதாபிராட்டிக்கு அழகு செய்த தோழிகளே சீதா பிராட்டியைக் கண்டு ஆசை கொண்டனர். ஆண்மகனே கண்டு ஆசைகொள்ளும் அழகன் இராமபிரான். அவ ருக்கு ஏற்ற நிலையில் பெண்களே பார்த்து ஆசை கொள்ளும் பேரழகியாக விளங்கினார் சீதாபிராட்டி. தனது நவரத்தின நகைகள் பலவிதமான வண்ணங்களை பளிங்குத் தரையில் மலர்கள் பரப்பிய மாதிரி ஒளிவீச, தனது மகளான சீதாபிராட்டி நடந்து வரும் பொழுது அவள் திருவடிகள் நோகும் எனப் பூமகள் பல வண்ண மலர்களை தரையில் வாரிச் சொரிந்த மாதிரியிருந்தது என்கிறார் கவிஞர். மண்டபத்திற்கு வந்த சீதாபிராட்டி அனைவரையும் வணங்கினாள்.

தான் கன்னி மாடத்தில் அன்று கண்ட பெண்தான் சீதாபிராட்டி என அறிந்து இராமபிரான் மகிழ்ந்தார். **சபையில் மாதவர்கள் அனைவரையும் பிராட்டி வணங்கினாள்.** ''நாங்கள் செய்த தவத்தின் காரணமாக இராமபிரானாக வந்துள்ளவர் திருமாலே. எனவே இவ் வம்மை தாமரை யில் வாழும் திருமகளே'' என எண்ணி மகிழ்ச்சியடைந்தார் வசிட்டர். ''இவ்வுலகை நெடுங் காலம் அரசு செய்த எனக்கு என்றுமில்லாத மன மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதே'' என எண்ணி மகிழ்ந்தார் தசரதர். ''இந்த அழகிய பெண் மனைவியாகக் கிடைக்க இராமபிரான் இந்த வில்லை மட்டுமா வளைப்பான்? ஏழுமலைகளையும் பொடி செய் என்றாலும் செய்திருப் பானே'' என விசுவாமித்திரர் மகிழ்ந்தார்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளக் கூடிய ஆண் மகனாயினும், நேராக அப்பெருமகனை நிமிர்ந்து பார்க்கக் கூடாது என்பது பண்டைய நெறிமுறை. எனவே சீதா பிராட்டி தனது கைகளில் உள்ள வளைகள் சிக்கிக் கொண்டதுபோலும், அவற்றைச் சரி செய்வது போல கடைக்கண்ணால் இராமபிரானைக் கண்டுமகிழ்ந்தாள் என்கிறார். ***(கை வளை திருத்துபு கடைக் கணின் உணர்ந்தால்).*** திருமணம் மறுதினம். இந்த இரவு சீக்கிரம் விடிந்து திருமண நாள் விரைந்து வரவேணும் என அனைவருமே வேண்டினர். ***இரவே கொடியாய்! விடி யாய்!*** எனச் சீதாபிராட்டி இருட்டை விரட்டினாள். தனது மனம் சீதாபிராட்டியுடன் சென்று விட்டதாம். ஏமனமே! எனை மறந்து எங்கு போய் விட்டாய்'' என இராமபிரான்

புனமான் அனையாளொடு போயின என்
மனமே எனையும் மறந்தனையோ

என்று, தன் மனத்தையே அழைத்தார் மணமகனான இராமபிரான்.

திருமணத்திற்கு வேந்தர், வீரர், மாந்தர், மகளிர் வந்து நிறைந்தனர். மிதிலாபுரி மக்கள் வீடுகளில் தோரணம் நாட்டி, பவழத் தூண்களுக்கு உறையிட்டனர். பூரண குடம் வைத்து பூசனை புரிந்தனர். மிதிலாபுரி அலங்காரம் செய்யப்பட்டது. சூரியனுடைய குலப் பிள்ளையன்றோ இராமபிரான்? எனவே திருமணக் கோலங்காண ஆசைகொண்டு **சூரியன் உதயமானான்** என்கிறார் கவிஞர்.

அஞ்சனவொளியானும் மலர்மிசை உறைவாளும்
எஞ்சலில் மணநாளைப் புணர்குவர் எனலோடும்
செஞ்சுடர் இருள் கீறித் தினகரன் ஒரு தேர்மேல்
மஞ்சனை யணி கோலம் காணிய என வந்தான்.

*(தொடரும்)*

# இல்லையே ... அமங்கலம் இல்லையே...

- டாக்டர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., மயிலாடுதுறை.

மனிதர்கள் மத்தியில் வாழ்க்கை பற்றி நிலவும் அச்சம் பெரிது. இதனால், மூட நம்பிக்கைகளை சுமந்து திரிவதையே அவர்கள் வாழ்வாக்கிக் கொண்டுள்ளனர். எதற்கெடுத்தாலும் அஞ்சி அஞ்சி சாகிற கோழைத் தன்மை, மனித இன வளர்ச்சிக்குத் தீங்கு பயப்பதாகும். இல்வாழ்வு பற்றிய அச்சத்தால், மனிதர்கள் மத்தியில் உலா வரும் மூடநம்பிக்கைகள் ஏராளம். குறிப்பாக, தமிழர்கள் இடையே இத்தகைய நம்பிக்கைகள், காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட மூடத்தனத்தில் முளைத் தெழுவது இரக்கத்தைத் தருகிறது.

''கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக'' என்று ஆத்திரப்பட்டார் வடலூர் வள்ளலார். வாழ்வியல் துறையில் நிறைந்திருந்த இந்த மூடத்தனம், தற்போது சமயத் துறையிலும் வேர்விட்டுக் கிளைத்திருப்பது வேதனை தருகிறது. உயிர்ப்புடைய, அறிவார்ந்த நம் சமயத்தில், இன்று மூட நம்பிக்கைகள், சடங்கு வடிவத்தில் எழுந்து நம்மை ஆட்டிப்படைக்கின்றன.

ஒரு நாள் திருக்கடவூர் அபிராமி அம்மன் சந்நிதியில் வழிபட்டுக் கொண்டிருந்தேன். வெளியூரிலிருந்து வந்திருந்த ஒரு மகளிர் வழிபாட்டுச் சங்கத்தார், அம்மை சந்நிதியில், உள்ளம் உருக அபிராமி அந்தாதியை ஓதிக் கொண்டிருந்தனர். நானும் மெய்மறந்து கேட்டு நின்றேன். நூறு பாடல் முடிந்து, திருக்கடைக் காப்பும் ஓதப்பட்டது. சற்றே நிலவிய நிசப்தத்திற்குப் பிறகு, அக்கூட்டத்தின் தலைவி, அனைவரையும் பார்த்து, ''இத்தோடு நிறுத்தாதீர்கள்; நிறைவாக ''தனம் தரும்'' என்று தொடங்கும் பாடலை ஓதி நிறைவு செய்யுங்கள்'' என்று பணித்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. சற்றே கூட்டம் கலைந்ததும், அந்த அம்மையாரை அணுகி ஏன் மறுபடியும் ''தனம் தரும்'' பாடலை ஓதி நிறைவு செய்யப் பணித்தீர்கள் என்று வினவி நின்றேன். அம்மையார் அவர்கள், சிரித்துக்கொண்டே சொன்ன செய்தி, என்னை வியப்பிலும், வேதனையிலும் ஆழ்த்தியது.

அபிராமி அந்தாதியின் நிறைவில் அமைந்துள்ள நூற்பயன் கூறும் ''ஆத்தாளை'' என்று தொடங்கும் பாடலின் நிறைவில் ''இல்லையே'' என்ற அமங்கலச் சொல் வருகிறது. நூலை, இதனோடு முடித்தால் ''ஒன்றும் இல்லாமல் போய்விடும்'' என்பதால்தான், நூலுள் இருந்து, வேறு ஒரு பாடலை ஓதி நிறைவு செய்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளோம் என்றார் அவ்வம்மையார். நான் வியப்போடு அருகில் நின்றிருந்த ஓதுவா மூர்த்திகளை நோக்கினேன். அவரும் அவ்வம்மையார் கூற்றுக்கு வழி மொழிபவராகவே காணப்பட்டார்.

இந்தச் சிந்தனையோடு வீடு திரும்பி, சமய நூல்களைப் புரட்டத் தொடங்கினேன். அபிராமி அந்தாதியின் நூற்பயன் கூறும் பாடல் ''முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே'' என்றுதான் நிறைவு பெறுகிறது. ''தீங்கில்லை'' என்ற தொடரை, ''நன்மையே தரும்'' என்று பொருள் கொள்ளாது, ''இல்லையே'' என்ற சொல்லைப் பற்றி மருளும் நம்மவர் அறியாமை என்னை வருத்தியது.

நூலுள் கவனம் செலுத்தினேன். ''சின்னஞ்சிறிய'' என்று தொடங்கும் ஐம்பத்து மூன்றாவது பாடல் ''இது போலும் தவம் இல்லையே'' என்றும், அறுபத்து எட்டாவது பாடல் ''படையாத தனம் இல்லையே'' என்றும் நிறைவடையக் கண்டேன். நம் சகோதரிகள் கவனத்திற்கு இப்பாடல்கள் வரவில்லை என்று கருதுகிறேன். வந்திருந்தால், இவற்றைக் கூட, தங்கள் பாராயணத்திலிருந்து அவர்கள் நீக்கியிருப்பார்களோ? என்னவோ? தெரியவில்லை.

ஒரு கருத்தை உடன்பாட்டாலும், எதிர் மறையாலும் சொல்லுவது என்பது கவி வழக்கு. அபிராமி அந்தாதி ஆசிரியரே, தம்முடைய ''அபிராமி அம்மைப் பதிகத்தில்'' பதினாறு பேறுகளைத் தொகுத்துக் கூறும் இடத்தில், கலையாத கல்வி, குறையாத வயது என்று, யாவற்றையும் எதிர் மறையில் அடுக்குவதை அவர்களுக்கு யார் எடுத்துச் சொல்லுவது?

மேலும், சிறிது முயன்று, தேவார ஆசிரியர்களிடம் தஞ்சம் புகுந்தேன். மூவர் தேவாரத்தில், பதிக இறுதியிலும், பதிகத்தின் இடையே உள்ள பாடல்களிலும், இத்தகைய எதிர்மறை முடிவுகள் நூற்றுக் கணக்கில் இருப்பதைக் கண்டு வியந்தேன். ''போந்த சுவடில்லையே'', ''எனக்கு இடரில்லையே'', ''தொழுவார்க்கு அல்லல் இல்லையே'', ''ஊனம் ஒன்றும் இல்லையே'', என்று வரும் திருநாவுக்கரசர் தேவாரத் தொடர்கள் நமக்கு ஆறுதல் தருவனவாக அமைந்தன. மேலாக, ''நவில்வார் வினை நாசமே'', ''திரிவார்க்கு இல்லை

பாவமே'', ''வணங்கீர் வினை மாயவே'', ''ஏத்த நம் வினை நாசமே'', என்று வரும் வேறுபட்ட தொடர்களும் அங்கே காணப்பட்டன. நம் சகோதரிகள் இவற்றுக்கு என்ன சொல்லப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

திருஞானசம்பந்தரிடம் சென்றால் அவரிடமும், ''மருவார் பிணி தானே'' ''ஏத்துவார்க்கு இடர் கெடுமே'' என்பன போன்ற ஆட்சியைக் காண முடிகிறது. சுந்தரரின் ''அருவினை இலரே'', ''இவை கற்றார் துன்பிலரே'', எனவரும் ஆட்சிகளோடு, கொல்லிப்பண்ணில் அமைந்த திருப்புகலூர் பதிகத்தின் பதினொரு பாடல்களும் ''இல்லையே'' என்று நிறைவடையக் காண முடிகிறது.

எனவே, இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கினால், எதிர்மறைச் சொல் ஆட்சிகளை அமங்கலமாகக் கருதுவது, எவ்வகையிலும் பொருந்துவது அன்று என்பது நன்கு புலனாகிறது.

இறைவன், உள் நின்று உணர்த்த, ''எனதுரை தனதுரையாக'' என்று கருதிப் பாடிய, நம் முன்னோர் பனுவல்கள், வேண்டுவார்க்கு, வேண்டுவனவற்றை, வேண்டியாங்கு வழங்கும் அருள் நிரம்பியன என்பது உறுதி. இதனை அறியாது, ஓரிரு சொற்களைப் பற்றி நின்று, அவற்றை அமங்கலமாகக் கருதி, புறம் தள்ளும் மௌடிகத்திலிருந்து தமிழ்ச் சைவ உலகம் விடுபட வேண்டும். அறியாமை பற்றிய அச்சங்களைக் கற்றவர்கள் நீக்கும் கடப்பாடு உடையவர்கள், அபிராமி அந்தாதியின், பயன் கூறும் பாடல், ''தீங்கில்லையே'' என்று எதிர் மறையில் முடிந்தாலும், ''யாவும் நன்மையாகும்'' என்பதே அத்தொடர் வழங்கும் உடன்பாட்டுப் பொருளாகும். இனியாவது, இத்தகு தவறான போக்கை நாம் திருத்திக் கொள்ள முன் வர வேண்டும்.

★★★

## வாசகர் எண்ணங்கள்

திருப்புகழ் மாமணி மு. அருணகிரி அவர்கள் வழங்கியிருந்த ''பஞ்சகௌயம்'' பற்றிய விளக்கம் அருமை. மெய்யன்பர்கள் அனைவரும் ஏற்கத்தக்க விளக்கம். விளக்கம் வழங்கிய திருப்புகழ்மாமணிக்கும், வெளியிட்ட திருக்கோயில் இதழுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துப் பாராட்டுகின்றேன்.

*- டாக்டர் டி. செல்வராஜ், பொன்னேரி*

சிறப்பு ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் ''கழுகுதொழுவேதகிரி'' என்னும் கட்டுரையை மிகச்சிறப்பாக எழுதியுள்ளார்கள். திருக்கழுகுக்குன்றத்தை நேரில் சென்று தரிசித்த மனநிறைவு உண்டானது.

*- க. இந்திராகணேசன், செங்கற்பட்டு*

டாக்டர் பருத்தியூர் சந்தானராமன் அவர்கள் வழங்கிவரும் ''வினாவும் விடையும்'' அருமை. அவற்றைத் தொகுத்துவைத்து என் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பலரும் படித்து பயன்பெறச் செய்து வருகின்றேன்.

*- சீனிவாசன், தமிழாசிரியர்,*
*நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சேலம்.*

முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் எழுதியுள்ள ஒரு சிக்கலும் தீர்வும் கட்டுரை சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது.

இராமபிரானால் தெய்வம் எனக்குறிப்பிடப்பட்ட கருணையுருவாம் கைகேயியின் தியாகத்தையும் சீலத்தையும் கம்பர் அறியாதவர் அல்லர். அவர் தம் வாக்கில் பெண்களைப் பழித்தது நாடக உத்திக்காக என்று உணரவேண்டுமே தவிர, பெண்களை உண்மையில் கம்பர் பழித்தாகக் கொள்ளுதல் கூடாது.

*- சுப்புரத்தினம், திருப்பத்தூர்.*

''கம்பரின் இராமாவதாரம்'' தவறாமல் படித்து மகிழ்கின்றேன். மிக அருமை. கம்பக்கலைமணி வாழ்க வளமுடன்.

*- எஸ். வேங்கட கிருஷ்ணன், காரமடை.*

★★★

# ஸ்ரீ வைகுண்டம் எவ்வளவு தூரம்?

– திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

ஒரு சமயம் வள்ளிமலை சுவாமிகள் வழக்கமாக கொண்டாடிவந்த அருணகிரிநாதர் ஜெயந்தி விழாவில் அடியேனும் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்றேன்.

வள்ளிமலை சுவாமிகள் ''மாண்டார் எலும்பணியும் சடை'' எனும் திருப்புகழைப் பாடி, அதன் பின் பகுதியில் வரும் கஜேந்திரனின் வரலாற்றைப் பற்றி, இதுகாறும் எவரும் கேட்டிராத வகையில், பொருள் சொன்னது, யாவரையும் வியப்பில் ஆழ்த்தியது அன்றி, பக்திபரவசத்தில் திளைக்கச் செய்தது என்றால் மிகையாகாது. பாடலின் பின் பகுதியைப் பார்ப்போம்.

''ஆண்டார் தலங்கள் அளந்திட
நீண்டார் முகுந்தர் தடந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்று முதலைவாயுற்று
ஆங்கோர் சிலம்பு புலம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆம்பூ முழங்கி அடங்கும் அளவில் நேசம்
பூண்டாழி கொண்டு வனங்களில்
ஏய்ந்தாள என்று வெறுந்தனி
போந்தோலம் என்றுத வும்புயல் மருகோனே''

என்பது அருணகிரியார் வாக்கு.

ஸ்ரீமந் நாராயணன், யானையின் கூக்குரலைக் கேட்டதும், லட்சுமிக்கும் சொல்லாமல், ஆதிசேடனுக்கும் அறிவிக் காமல், கருடன் மீது ஆரோகணித்து வைகுண்டத்தி லிருந்து பூலோகத்திற்கு வந்து, யானையை முதலை வாயினின்றும் காப்பாற்றினார்'' என்ற அளவிலே பாடி இருந்த போதிலும், அதே நிகழ்ச்சியை அருணகிரியார் தனது பாடலில் விவரிக்கும் பாணியே அலாதி என்றே அறுதியிட்டு கூறலாம். இனி அப்பாடலின் சம்பந்தமாய் அடியேனின் குருநாதர் தக்க உதாரணத்தோடு விளக்கம் அளித்த விதத்தினை உங்கள் நினைவிற்கு கொண்டு வருவது அவசியமாகும்.

சோழ நாட்டில், அரசன் நிகழ்த்திய வித்வத் சபையில், கலந்து கொண்ட அனைத்து கவிஞர்களுக்கும், அவரவர்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்து வந்தனர் எனக் கேட்டறிந்து, அதற்கேற்ப பிரயாணச் செலவையும், பரிசோடு சேர்த்து கொடுத்து வரும் சமயம், ஒரே ஒரு கவிஞர் மட்டும், யாவரும் வியக்கத்தகும் வகையில் தான் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து நேரே வருவதாகவும், அதற்கேற்பப் பிரயாணச்செலவை கணக்கிட்டுப் பரிசோடு அளிக்குமாறு விண்ணப்பித்தார். இதை கேட்டதும் அரசரும் சபையோரும் ஆச்சரியப் பட்டதோடன்றி, கவிஞரது பொருளாசையை ஒருபுறம் உணர்ந்த போதிலும், அவரது விருப்பத்தை எவ்வாறு பூர்த்தி செய்வதென்றே அறியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர். அது சமயம் சிதம்பரத்தில் இருந்து வந்த ஒரு கவிஞர், யாவரும் கவலைப் பட வேண்டியதில்லை, இதற்கு அருணகிரியார் பாடலாகிய ''மாண்டார் எலும் பணியும் சடை'' எனும் பாடலின் பின்பகுதியிலேயே விளக்கம் அளித்துள்ளார். பாடலின் கருத்தை கூர்ந்து கவனித்தாலே, வைகுண்டத்துக்கும் பூலோகத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என அனுமானித்து விடலாம் எனக்கூறி, பாடலைப்பாடி, அதன் விளக்கத்தை சபையோர் முன்னிலையில் கீழ்வருமாறு எடுத்துரைத்தார்.

பாடலின் பின்பகுதியான, ஆண்டார்தலங்கள் அளந்திட நீண்டார் எனத் துவங்கி

''ஆம்பூ முழங்கி அடங்கும் அளவில்நேசம்
பூண்டாழி கொண்டு வனங்களில்
ஏய்ந்தாள என்று வெறுந்தனி
போந்தோலம் என்றுத வும்புயல் மருகோனே''

எனப் பாடியதில் வைகுண்டத்தில் துயில் கொண்டிருந்த நாராயணர், யானையானது ''ஆதிமூலமே'' என்று புலம்பிடும் சத்தம் கேட்டதும், கருடன் மீது ஆரோகணித்து, தன் வருகையை தெரிவிக்க தன் கையிலுள்ள வலம்புரி சங்கை எடுத்து ஊதி, அதன் நாதம் அடங்குவதற்குள், வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு வந்து யானையின் காலை பிடித்துள்ள முதலையின் வாயினின்றும் காத்தருளியவரின் மருகோனே'' என்பதே இதன் பொருள். இப்பொழுது தங்கள் அரண்மனையில் உள்ள திடகாத்திரமான ஒரு மல்யுத்த வீரனை சங்கு எடுத்து, தன் சக்திக்கு ஏற்ற வகையில் மூச்சு பிடித்து ஊதச் சொல்லி, அதன் நாதம் அடங்கும் அளவிற்கு, புலவரை நடக்கச் சொல்லி, எவ்வளவு தூரம் நடக்கிறாரோ அந்த தூரமே உண்மையான பக்தனுக்கு வைகுண்டம் உள்ள தூரம் என அரசரிடம் சொல்ல, அரசரும் அவ்வாறே, ஒரு மல்யுத்த வீரனை அழைத்து அவனை சங்கின் மூலமாக மூச்சு பிடித்து ஊதச் சொல்லி அந்தச் சத்தம் அடங்குவதற்குள், அந்த புலவரை துரிதமாக ஓடியோ, அல்லது வேகமாக ஓடும் குதிரையின் மூலம் சவாரி செய்தோ, எவ்வளவு தூரம் சென்றார் என்பதைக் கணக்கிட்டு, அவருக்கு சன்மானத்தோடு, போக்குவரவு செலவையும் கொடுங்கள் என உத்தரவிட்டார். அப்புலவர் தன் செருக்கினால் நேர்ந்த அவமானத்தை உணர்ந்து, அன்றிலிருந்து அகங்காரத்தை அறவே மறந்து புனிதரானார்.

இந்த அளவிற்கு அருணகிரியார் பாடலுக்கு அதிசயிக்கத் தக்க விதத்தில் பொருளைப் பொருத்தி வள்ளிமலை சுவாமிகள் விளக்கம் அளித்தார்கள்.

இவ்வாறு எல்லா தெய்வங்களையும் துவேஷமின்றி அரவணைத்துப் போற்றி புகழ்ந்து பாடிய அருணகிரிப் பெருமானை ''ஞானி'' என்று கொண்டாடிப் போற்றிடுவோமாக.

# வினாவும் விடையும் (வைணவம்)

- பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன்

1) விஷ்ணு புராணங்கள் எத்தனை?
2) முதலாழ்வார்கள் மூவர் யாவர்?
3) திவ்விய தேசங்கள் எத்தனை?
4) 'பெருந்தமிழன்' என்று தன்னைக் கூறிக் கொண்ட ஆழ்வார் யார்?
5) எந்த ஆழ்வாரைத் திருமால், 'கலியன்' என்றார்?
6) ''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?'' இக்கவிதை வரி எந்த நூலில் உள்ளது?
7) 'நப்பின்னை' என்று திருப்பாவை கூறும் தேவியார்?
8) ஆண்டாள் பாடல்களை எப்பெயரிட்டு அழைப்பர்?
9) பூவராக சுவாமி எழுந்தருளியுள்ள தலம் எது?
10) 'திரு விண்ணகரம்' எனப் புகழப்படும் தலம் எது?
11) திருமழிசை ஆழ்வாரின் முக்கிய சீடர் யார்?
12) சேனை முதலியார் (விஷ்வக் ஸேனர்) என்பவர் யார்?
13) பரிமுகப் பெருமான் யார்?
14) அவர் எந்த தேவதைக்குக் குருநாதர்?
15) நாராயண பட்டத்திரி நாராயணீயத்தில் எழுதாமல் விடுத்த ஜடபரத சரித்திரத்தை இயற்றி இணைத்தவர் யார்?
16) வால்மீகி தம் இராமாயணத்துக்கு இட்ட பெயர் என்ன?
17) இராவணனின் மற்றொரு பெயர் என்ன?
18) விசுவாமித்திரர் இராமருக்கு உபதேசித்த இரு மந்திரங்கள் எவை?
19) ஈசன் இராவணனுக்கு வழங்கிய வாளின் பெயர் என்ன?
20) எந்த ஊரில் இராமர் ஜடாயுவக்காக இறுதிக் கடன் இயற்றியதாக ஐதீகம்?
21) சீதைக்கு அணிகலன்களைப் பூட்டி அழகு பார்த்த முனி பத்தினி யார்?
22) 'உறங்காவில்லி' என்று சிறப்பிக்கப்படும் இராமாயண பாத்திரம் யார்?
23) இலவணாசுரன் யார்?
24) அவனை வதைத்தது யார்?
25) 'ஸ்ரீமத்' என்னும் அடைமொழியுடன் அழைக்கப் படும் மூன்று நூல்கள் எவை?
26) நாகவாகனம் விஷ்ணு ஆலயங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
27) மதங்க முனிவரின் மாணவி யார்?
28) பாவை நோன்பின் பாகவதப் பெயர் என்ன?
29) வில்லிப் புத்தூரார் தவிர தமிழில் பாரதம் பாடிய மற்றொரு புலவர் யார்?
30) 'விப்ர நாராயணர்' என்பவர் யார்?
31) குருவாயூர் திவ்ய தேசங்களில் ஒன்றா?
32) இராவணனின் கொடி வீணை, துரியோதனனின் கொடி என்ன?
33) முழவக் கொடியோன் யார்?
34) அருச்சுனன் கொடியில் இருந்து அனுமார் பெற்ற பயன் என்ன?
35) 'பாதுகா சகஸ்ரம்' என்ற நூலை இயற்றியவர் யார்?
36) திருமோகூர் தலத்துப் பெருமாள் பெயர் என்ன?
37) 'உறங்கா வில்லி தாசர்' என்பவர் யார்?
38) பிரகலாதன் மற்றும் துருவன் வரலாறுகள் எந்தப் புராணத்துள் இடம் பெற்றுள்ளன?
39) திருமாலுக்கு உகந்த நாட்டியாஞ்சலி எது?
40) பெருமாளுக்குப் பல்லாண்டு பாடியவர் யார்?
41) தமிழில் பாகவதம் பாடியவர் யார்?
42) எந்த ஊர் கோபுரம் தமிழ்நாடு அரசின் இலச்சினை யில் இடம் பெற்றுள்ளது?
43) ''வேதம் தமிழ் செய்த மாறன்'' யார்?
44) உரையாசிரியர் பெரிய வாச்சான் பிள்ளையின் இயற் பெயர் என்ன?
45) வீபீஷண சரணாகதிக்கு அவர் எழுதிய உரையை எப்படி அழைக்கின்றனர்?
46) திருப்பாவை ஜீயர் யார்?
47) வங்க மொழியில் இராமாயணம் யற்றியவர் யார்?
48) மாண்டவி, சுருதகீர்த்தி என்பவர் யாவர்?
49) இந்திரஜித்தின் இன்னொரு பெயர் என்ன?
50) ஜாம்பவான் யாருடைய அம்சமாகத் தோன்றி யிருந்தார்?
51) ஜடாயுவின் சகோதரர் யார்?
52) வால்மீகி இராமாயணத்தில் எந்த மந்திரம் ஆயிரம் சுலோகங்களுக்கு ஒரு முறை ஓர் எழுத்து வீதம் இடம் பெற்றுள்ளது?

53) திருவிக்கிரமப் பெருமாள் (உலகளந்த பெருமாள்) எங்கு உள்ளார்?

54) 'பெரிய திருவடி' என்பவர் யார்?

55) கல்கருடன் சேவை நடைபெறும் தலம் எது?

56) மயிலையில் அவதரித்த ஆழ்வார் யார்?

57) இராமானுஜர் எந்த ஊர் கோபுரத்தின் மீதேறி ஆர்வமுள்ளோர் அனைவருக்கும் எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார்?

58) ''பைந்தமிழின் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல்'' என்று எந்த நூல் திருமாலைப் புகழ்கிறது?

59) ஆயிரம் ஆண்டுத் தொன்மையான பருத்தியூர் வரத ராஜப் பெருமாள் பஞ்ச லோகப் படிமத்தின் தனிச் சிறப்பு என்ன?

60) பாயசம், சர்க்கரைப் பொங்கல் இவற்றை வைணவத்தில் எப்படிக் கூறுவர்?

## விடைகள்

1) நான்கு
2) பொய்கையார், பூதத்தார், பேயார்.
3) நூற்றெட்டு.
4) பூதத்தாழ்வார்.
5) திருமங்கையாழ்வார்.
6) கம்பராமாயணம்.
7) திருமாலின் மூன்றாவது தேவியான நீளா தேவி.
8) நாச்சியார் திருமொழி.
9) ஸ்ரீமுஷ்ணம்.
10) உப்பிலி அப்பன் கோயில்.
11) கணிகண்ணன்.
12) திருமாலின் படைத்தலைவர்.
13) ஹயக்ரீவர்.
14) சரஸ்வதி.
15) சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர்.
16) சீதையின் கதை (சீதாயச் சரிதம்).
17) தசகிரீவன்.
18) பலை, அதிபலை.
19) சந்திரஹாசம்.
20) திருப்புட்குழி.
21) அநசூயை.
22) இலக்குவன்.
23) சிவனிடம் சூலம் பெற்று இராமர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவன்.
24) சத்ருகுனன்.
25) ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் பகவத் கீதை.
26) சேஷ வாகனம்.
27) சபரி.
28) காத்யாயனி விரதம்.
29) பெருந்தேவனார்.
30) தொண்டரடிப்பொடி ஆழ்வார்.
31) இல்லை.
32) பாம்புக் கொடி.
33) தருமபுத்திரன்.
34) கீதோபதேசம்.
35) வேதாந்த தேசிகர்.
36) காளமேகப் பெருமாள்.
37) இராமானுஜரின் சீடர்.
38) ஸ்ரீமத் பாகவதம்.
39) அரையர் சேவை.
40) பெரியாழ்வார்.
41) செவ்வைச் சூடுவார்.
42) திருவில்லிப் புத்தூர்.
43) நம்மாழ்வார்.
44) கிருஷ்ணன்.
45) அபயப்ரதான ஸாரம்.
46) இராமானுஜர்.
47) கிருத்திவாஸ்.
48) முறையே பரத சத்ருகுனரின் மனைவியர்.
49) மேகநாதன்.
50) பிரம்ம தேவன்.
51) சம்பாதி.
52) காயத்திரி.
53) திருக்கோவிலூர்.
54) கருடன்.
55) நாச்சியார் கோயில்.
56) பேயாழ்வார்.
57) திருக்கோட்டியூர்.
58) மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்.
59) பிரயோகச் சக்கரம்.
60) திருக்கண்ணமுது, அக்கார அடிசில்.

★★★






திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆலயப் பணியாளர்கள் குடியிருப்பு, இணை ஆணையாளர் - செயல் அலுவலர் அலுவலகக் கூடுதல் கட்டிடம், அன்னதான மண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் திறந்துவைத்தார்கள். இவ்விழாவில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் திருமிகு என். பெரியசாமி, தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இணை ஆணையர் திரு ஆ. சண்முகம், பி.ஏ., பி.எல். திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் திரு எம்.டி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



இந்துசமய அறநிலைய அட்சித்துறை வெளியிட்டுள்ள ''உத்தரகாமிக ஆகமம்'' எனும் நூலை மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்வளர்ச்சி, இந்துசமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் வெளியிட்டார்கள். நூலின் முதற்படியை இந்துசமயம் மற்றும் அறநிலைய ஆட்சித்துறை செயலர் திருமிகு ராமகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப., அவர்களும் நூலினை வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்த சிவாகமகலாநிதி அல்லூர் வி. விஸ்வநாத சிவாச்சாரியாரும் உடன் உள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.